விற்பனையாகிறது
இந்துநாகரிகத்திற் கலை
கலாநிதி காரை.
செ. சுந்தரம்பிள்ளை
எழுதியது
க. பொ. த. உயர்தரம்
தொடக்கம் பி. ஏ. வகுப்பு
வரை இந்துநாகரிகத்தை
யும் நுண்கலைகளையும் கற்
கும் மாணவர்களுக்கு ஏற்ற
அரியதொரு நூல்.
(சி-9055)

Registred as a Newspaper

# உதயன்

விலை ரூபா 5-00

சுடர் 9 திருவள்ளுவர் ஆண்டு 2025 ஆவணி 29 ஞாயிற்றுக்கிழமை (11 09 1994) UTHAYAN A Lively National Tamil Daily கதிர் 288

விற்பனையாகிறது
இந்துநாகரிகத்திற் கலை
கலாநிதி காரை.
செ. சுந்தரம்பிள்ளை
எழுதியது
கிடைக்குமிடம்:
பூபாலசிங்கம் புத்தகசாலை,
யாழ்ப்பாணம்.
(சி-9055)

# தலைவர் பிரபாவின் கடிதத்துக்கு பிரதமர் சந்திரிகா நேற்றுப் பதில்

## அரசியல் தீர்வுப் பேச்சுக்கு அரசு தயார் என்று அறிவிப்பு





கொழும்பு, செப்ரெம்பர் 11

இனப் பிரச்சினைக்கு அரசியல் தீர்வு ஒன்றைக் காணும் பொருட்டு, தமிழீழ விடுதலைப் புலிகளுடன் பேச்சுவார்த்தை நடத்துவதற்கு அரசாங்கம் தயாராக உள்ளது என்று —

பிரதமர் சந்திரிகா குமாரதுங்கா தமிழீழ தேசிய தலைவர் வே. பிரபாகரனுக்கு நேற்று அனுப்பி வைத்த பதிலில் தெரிவித்திருக்கிறார்.

ஆரம்பப் பேச்சுவார்த்தைகளை நடத்துவதற்கு பிரதிநிதி ஒருவரை நியமிக்குமாறும் பிரதமர் சந்திரிகா, தலைவர் பிரபாகரனிடம் கேட்டுள்ளார்.

செஞ்சிலுவைச் சங்க சர்வதேசக்குழு ஊடாக பிரதமரின் பதில் தலைவர் பிரபாகரனுக்கு நேற்று அனுப்பப்பட்டதாக பிரதிப் பாதுகாப்பு அமைச்சர் அனுருத்த ரத்வத்த தகவல் தெரிவித்தார்.

இனப் பிரச்சினைக்கு அரசியல் தீர்வு காண்பதற்குரிய பேச்சுவார்த்தை நடத்துவதற்கு தமிழீழ விடுதலைப் புலிகள் தயாராக உள்ளனர் என்று தலைவர் பிரபாகரன் கடந்த வார இறுதியில் பிரதமர் சந்திரிகாவுக்கு கடிதம் மூலம் அறிவித்திருந்தார்.

செஞ்சிலுவைச் சங்க சர்வதேசக் குழுவின் ஊடாக அந்தக் கடிதம் அனுப்பப்பட்டிருந்தது. தலைவரின் அந்தக் கடிதத்துக்கே பிரதமர் சந்திரிகா நேற்றுப் பதில் அனுப்பி வைத்தார்.

வடபகுதிக்கு மின்சாரம் வழங்குவது குறித்தும் பிரதமரின் பதில் கடிதத்தில் விபரமாகத் தெரிவிக்கப்பட்டுள்ளதாக இலங்கை வானொலி தெரிவித்தது. (அ-க)

### வன்னி, கிளிநொச்சி பகுதிகளில் மழை

யாழ்ப்பாணம், செப். 11

வன்னி மாவட்டத்தின் பல பகுதிகளில் பரவலாக மழை பெய்து வருவதாக அங்கிருந்து கிடைக்கும் செய்திகள் தெரிவிக்கின்றன.

கிளிநொச்சியில் நேற்று பகல் நல்ல மழை வீழ்ச்சி காணப்பட்டதாக தெரிய வருகிறது.

# விடுதலைப் புலிகளிடம் எங்களுக்கு நம்பிக்கை இருக்கிறது

## செய்தியாளர் மாநாட்டில் அனுருத்த

கொழும்பு, செப். 11

விடுதலைப் புலிகளின் மீது எமக்கு நம்பிக்கை உண்டு. பேச்சுவார்த்தை நடத்துவதற்கு நாம் நம்பிக்கை வைக்க வேண்டும். இல்லாவிட்டால் நாம் பேச்சு நடத்த முடியாது.

பிரதிப் பாதுகாப்பு அமைச்சர் அனுருத்த ரத்வத்த நேற்று முன்தினம் (9-9 94) கொழும்பில் நடத்திய செய்தியாளர் மாநாட்டில் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

விடுதலைப் புலிகள் மீது அரசுக்கு நம்பிக்கை உள்ளதா? என்ற கேள்விக்குப் பதில் அளிக்கையிலேயே பிரதி பாதுகாப்பு அமைச்சர் இதனைத் தெரிவித்தார்.

கேள்வி: முன்னாள் ஜனாதிபதி பிரேமதாஸாவுக்கு நடந்தது உங்களுக்கும் நடக்காதா?

ரத்வத்த: பிரேமதாஸா விட்ட தவறுகள் எமக்குத் தெரியும். அதே தவறுகளை நாம் விடமாட்டோம். படையினரும் இதே கவலையைத்தான் தெரிவித்தனர். கடந்த காலத் தவறுகளை திரும்ப விடமாட்டோம் என்று நாம் படையினருக்கு உறுதி கூறியுள்ளோம்.

கேள்வி: பேச்சுவார்த்தை ஆரம்பமாவதற்கு முன்பு சில முகாம்களை இராணுவம் வெளியேற வேண்டும் என்று பிரபாகரன் கூறியதாக யாழ்ப்பாணத்தில் இருந்து அறிக்கை வந்துள்ளதே.

ரத்வத்த: அப்படி அவர் கேட்கவில்லை. யுத்த நிறுத்தம் தொடர்பாக நிபந்தனையற்ற பேச்சுவார்த்தையைத்தான் அவரின் கடிதம் கேட்டுள்ளது. அதன் அர்த்தம் தற்போதைய தரை நிலைவரம் தற்போதைக்கு நீடிக்கும் என்பது தான். இதைத்தான் படையினரும் என்னிடம் தெரி

(6 ஆம் பக்கம் பார்க்க)

# பிரதமர் சந்திரிகாவின் பதில் தாமதமானதற்கு காரணம்?

விடுதலைப் புலிகள் தலைவர் திரு. பிரபாகரனுக்குப் பதில் கடிதம் அனுப்புவதற்கு பிரதமர் சந்திரிகா தாமதித்ததன் காரணத்தை நேற்று முன்தினம் நடைபெற்ற செய்தியாளர் மாநாட்டில் பிரதி பாதுகாப்பு அமைச்சர் அனுருத்த ரத்வத்த விளக்கினார்.

விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டில் உள்ள வடபகுதிக்கு மின்சாரம் விநியோகிக்கப்படும் என்ற திட்டவட்டமான தனது முடிவை அக்கடிதத்தில் பிரதமர் சேர்க்க விரும்பியதே கடிதம் தாமதமானதற்குக் காரணம் என்று அவர் தெரிவித்தார்.

"சமாதானப் பேச்சுவார்த்தைகளை நடத்துவதற்குத் தேவையான வழி முறைகள் பற்றி ஆராய விடுதலைப் புலிகளின் பிரதிநிதி ஒருவரை நியமிக்கும்படி திரு. பிரபாகரனைக் கோருவதாக அப்பதில் கடிதம் அமையும்.

அத்துடன் அப்பதில் கடிதத்தில் —

அடுத்த இரண்டு அல்லது மூன்று மாதத்தில் யாழ்ப்பாணத்துக்கும் —

எட்டு மாதங்களில் வட மாகாணத்தின் எஞ்சிய பகுதிகளுக்கும் — மின்சாரம் வழங்கப்படும் என்ற உறுதி மொழியும் இடம்பெறும் என்று திரு. ரத்வத்த தெரிவித்தார்.

அமைச்சர் மேலும் சொன்னதாவது:-

ஐந்து ஜெனரேட்டர்கள் மூலம் யாழ்ப்பாணத்துக்கு

(6 ஆம் பக்கம் பார்க்க)

### தொலைபேசி ஒற்றுக்கேட்டல்

# ஜனாதிபதியிடம் பிரதமர் முறையீடு

கொழும்பு, செப். 11

தமதும், தமது கட்சித் தலைவர்களினதும் தொலைபேசி உரையாடல்கள் கடந்த மூன்று வருடங்களாக தேசிய புலனாய்வுச் சேவையினரால் ஒற்றுக்கேட்கப்பட்டு வந்தது தொடர்பாக பிரதமர் சந்திரிகா குமாரதுங்கா ஜனாதிபதி விஜேதுங்காவிடம் முறைப்பாடு செய்துள்ளார்.

இது ஒரு ஜனநாயக விரோதச் செயல் என்றும் சந்திரிகா கண்டித்துள்ளார்.

தொலைபேசி உரையாடல்களை ஒற்றுக்கேட்கக் கூடிய நவீன சாதனங்கள், முன்னாள் ஜனாதிபதி பிரேமதாஸாவின் காலத்தில் இருந்து இறக்குமதி செய்யப்பட்டன என்று தெரிவிக்கப்படுகிறது.

முன்னாள் ஜனாதிபதி பிரேமதாஸாவின் பணிப்பின் பேரில் தேசிய புலனாய்வு சேவையினர் தொலைபேசி உரையாடல்களை ஒற்றுக்கேட்டு அவை பற்றிய தகவல்களை நாளாந்தம் ஜனாதிபதிக்குத் தெரிவித்து வந்துள்ளனர் என்றும் தெரிவிக்கப்படுகிறது. (இ-ஐ-6)

### முச்சந்தி முனி



உதுக்கப்பட ... தியாய் ஒதுங்கிட்டார் பாருங்கோ.......

# தீவிர அரசியலிலிருந்து டி.பி. ஒதுங்குகின்றார்

கொழும்பு, செப். 11

தீவிர அரசியலில் இருந்து ஒதுங்குவதற்கு ஏதுவாகவே ஜனாதிபதி டி.பி விஜேதுங்கா ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர் பதவியில் இருந்து விலகினார் என்று தெரிவிக்கப்படுகிறது.

தமது பூரண அரசியலில் இருந்து சிறிது, சிறிதாக விடுவித்துக் கொள்வதே விஜேதுங்காவின் விருப்பம் என்று முன்னாள் சிரேஷ்ட அமைச்சர் ஒருவர் தெரிவித்தார்.

இதனால் எதிர்வரும் ஜனாதிபதி தேர்தலில் ஐக்கிய தேசியக் கட்சி வேட்பாளரை ஆதரித்து திரு. விஜேதுங்கா பிரசாரம் செய்யமாட்டார் என்

(6 ஆம் பக்கம் பார்க்க)

# கிளாலி பயணிகள் நலன் கருதி இரவு நேர மினி பஸ் சேவை

யாழ்ப்பாணம், செப். 11

கிளாலியூடாக யாழ். வரும் பயணிகளின் நன்மை கருதி இரவுநேர மினிபஸ் சேவையை நடத்த யாழ். மாவட்ட சிற்றூர்திச் சேவைச் சங்கங்களின் இணையம் முடிவு செய்துள்ளது.

இதன் படி கிளாலி - பூநகரி படகுச் சேவை நடைபெறும் நாட்களில் யாழ். நகரில் இருந்து மூளாய், அச்சுவேலி தெல்லிப்பளை அலவெட்டி, புன்னாலைக்கட்டுவன் ஆகிய இடங்களுக்கு இரவு நேர மினிபஸ் சேவை நடைபெறும்.

இந்த இரவு நேர மினிபஸ் சேவைகள் நாளை முதல் ஆரம்பமாகும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஐ)

# யாழ். மாவட்ட தேர்தல் முடிவை ஆட்சேபித்து மனுக்கள் தாக்கல்

கொழும்பு, செப். 11

யாழ். மாவட்டத் தேர்தல் முடிவுகளை ஆட்சேபித்து இரு மனுக்கள் மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டுள்ளன.

வத்தளை - ஹெந்தலை வாசியான தம்பிராஜா சுப்பிரமணியம் தாக்கல் செய்த மனுவில் பிரதிவாதிகளாக தேர்தல் ஆணையாளர், யாழ் மாவட்ட தெரிவத்தாட்சி அதிகாரி கா. மாணிக்கவாசகர், யாழ்.மாவட்ட தெரிவத்தாட்சி அதிகாரி லக்ஷ்மன் பெரேரா மற்றும் யாழ் மாவட்டத்தில் தெரிவான 10 எம்.பிக்களும் காட்டப்பட்டுள்ளனர்.

மனுதாரர் தனது மனுவில் கூறியிருப்பதாவது!

கடந்த பொதுத் தேர்தலில் நான் ஈ.பி.டி.பி. வேட்பாளராகப் போட்டியிட்டேன்.

ஈ.பி.ஆர்.எல்.எப்., முஸ்லிம் காங்கிரஸ், சுயேட்சைக்குழு-1, சுயேட்சைக்குழு - 2 ஆகியவற்றின் சார்பிலும் வேட்பாளர்கள் போட்டியிட்டனர்.

18 - 7 - 94 அன்று கடற்படைப் படகு மூலம் ஈ. பி. ஆர் எல் எப். உறுப்பினர்கள் காரைநகரில் இருந்து அனலைதீவுக்கு கூட்டிச் செல்லப்பட்டனர். வேலணை, சுருவில், அனலைதீவு, வார்வவற்றுறை

(6 ஆம் பக்கம் பார்க்க)

# மினிபஸ் கட்டணங்கள் நேற்றுமுதல் குறைப்பு

யாழ்ப்பாணம், செப். 11

யாழ். மாவட்டத்தில் மினிபஸ் கட்டணங்கள் நேற்று முதல் குறைக்கப்பட்டிருப்பதாக தனியார் போக்குவரத்துப் பகுதி இணைப்பாளர் வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

யாழ். நகரில் இருந்து பின்வரும் இடங்களுக்கான பழைய கட்டணங்களினதும், குறைக்கப்பட்டுள்ள புதிய கட்டணங்களினதும் விபரம் வருமாறு:-

* பருத்தித்துறை — 30 ரூபாவில் இருந்து 21 ரூபா.

(6 ஆம் பக்கம் பார்க்க)

# பள்ளிக்குடா மோதலில் 6 போராளிகள் வீரச்சாவு

யாழ்ப்பாணம், செப். 11

கடந்த 6 ஆம் திகதி மன்னார் பள்ளிக்குடாவில் ஸ்ரீலங்கா இராணுவத்தினருடன் ஏற்பட்ட நேரடி மோதல் ஒன்றில் விடுதலைப் புலிகள் இயக்கப் போராளிகள் ஆறு பேர் வீரச்சாவடைந்தனர்.

★ கப்டன் மௌனதேவன் (செபமாலை ... ன்சன்) முருங்கன், மன்னார்

★ கப்டன் குமுதன் (தங்கவேலு தேவராஜா) மட்டக்களப்பு

★ கப்டன் புனிதராஜ் (ரட்ணசிங்கம் தயாபரன்) மட்டக்களப்பு

★ கப்டன் முத்துக்குமரன் (அந்தோனி கின்ஸ்லி) பரப்பாங்கண்டல், உயிலங்குளம், மன்னார்

★ இரண்டாம் லெப்ரினன்ட் ஞானமூர்த்தி (அருப்பையா வேலுசாமி) அடம்பன் மன்னார்

★ இரண்டாம் லெப்ரினன்ட் ராஜ்மோகன் (ராமமூர்த்தி யோகரட்ணம்) காரைநகர்

இந்த அறுவருமே வீரச்சாவைத் தழுவிக் கொண்டவர்களாவர். (இ-4)

### திரியாயில் இருவர்

யாழ்ப்பாணம், செப். 11

கடந்த 7 ஆம் திகதி திருகோணமலையில் திரியாய் பகுதியில் சிறீலங்கா இராணுவத்தினர் பதுங்கியிருந்து தாக்குதல் நடத்தியதில் விடுதலைப் புலிகள் இயக்க போராளிகள் இருவர் வீரச்சாவடைந்தனர்.

வீரவேங்கை தங்கவேலன் என அழைக்கப்படும் திருகோணமலையைச் சேர்ந்த சித்திரவேல் பாபு —

வீரவேங்கை நீலவாணன் என அழைக்கப்படும் திருகோணமலையைச் சேர்ந்த செல்வராசா யோகேஸ்வரன்—ஆகிய இரு போராளிகளுமே வீரச்சாவைத் தழுவிக் கொண்டவர்கள் ஆவார். (இ-4)

# ஹில்டன் ஹோட்டல் ஊழலில் சொக்ஸி

கொழும்பு, செப். 11

கொழும்பில் உள்ள பிரபல ஐந்து நட்சத்திர ஹோட்டலான ஹில்டன் ஹோட்டலின் பணிப்பாளர் சபையை நீக்கிவிட்டுப் புதிய பணிப்பாளர் சபை ஒன்றை நியமிப்பதற்கும் —

அங்கு நிகழ்ந்த பாரிய ஊழல்கள் தொடர்பாக விசாரணை நடத்தவும் நிதி அமைச்சு முடிவு செய்திருப்பதாக அறிவிக்கப்படுகிறது.

ஹில்டன் ஹோட்டலில் 65 சதவீதமான பங்குகளை திறைசேரி வாங்கியுள்ளது. முன்னாள் ஜனாதிபதிகளான ஜே ஆர் ஜெயவர்த்தனா, ஆர் பிரேமதாஸா ஆகியோர் இந்த ஹோட்டலுக்கு பல சலுகைகளை வழங்கியிருந்தனர்.

அங்கு இடம்பெற்ற பெரும் ஊழல் சம்பவங்களில் சம்பந்தப்பட்ட அரசியல்வாதிகளில் முன்னாள் அரசமைப்பு அலுவல்கள் விவகார அமைச்சர் சொக்ஸியும் ஒருவராவார்.

ராவய பத்திரிகையின் ஆசிரியர் விக்டர் ஐவன் இத்தகவல்களை பி. பி. ஸி. சிங்கள சேவைக்குத் தெரிவித்தார். (இ-ஐ-6)

# பிரேமதாஸா கொலை: நீதிவானிடம் அறிக்கை

கொழும்பு, செப். 11

முன்னாள் ஜனாதிபதி பிரேமதாஸா கொலை தொடர்பாக இரகசியப் பொலிஸார் அந்தரங்க அறிக்கை ஒன்றை கொழும்பு மேலதிக நீதிவான் சம்பா புஞ்சிஹேவ விடம் கடந்த புதன்கிழமை சமர்ப்பித்தனர்.

கொலை சம்பந்தமான விசாரணை இன்னும் முடியவில்லை என்றும் இரகசியப் பொலிஸ் தரப்பில் ஆஜரான சிரேஷ்ட சட்டத்தரணி அனுரா மெத்தகொட தெரிவித்தார்.

பேராசிரியர் ரவீந்திர பெர்னாண்டோவின் வைத்திய அறிக்கையையும் பொலிஸார் நீதிவானிடம் கையளித்தனர்.

விசாரணை நடத்துபவர்களுக்கு தேவையான சகல அம்சங்களும் வைத்திய அறிக்கையில் காணப்படுவதாகக் கூறிய நீதிவான், அதற்காக அந்த அறிக்கையை தயாரித்த பேராசிரியரைப் பாராட்டினார்.

பிரேமதாஸா கொலை பற்றி விசாரிக்க ஆணைக்குழு ஒன்றை நியமிக்க அரசு முடிவு செய்துள்ளதாக சத்தேச நபர்களின் சிரேஷ்ட சட்டத்தரணி ஜோசப் சார்ள்ஸ் தெரிவித்

(6 ஆம் பக்கம் பார்க்க)

# பல்கலைக் கழகப் பட்டமளிப்பு விமரிசையாக நடைபெற்றது

யாழ்ப்பாணம், செப் 11

யாழ். பல்கலைக்கழகத்தின் 14 ஆவது பட்டமளிப்பு விழா நேற்று யாழ். பல்கலைக்கழக கைலாசபதி கலையரங்கில் வெகு விமரிசையாக இடம் பெற்றது.

அனைத்துப் பீடங்களையும் சேர்ந்த 642 பேர் நேற்று பல்கலைக்கழகத்திலிருந்து பட்டதாரிகளாக வெளியேறினர்.

... பட்டமளிப்பு விழா ... இடம் பெற்றது.

ஒவ்வொரு அமர்வுக்கு முன்பும் பட்டுக்குடை, ஆலவட்டம் சகிதம் துணைவேந்தர் க. குணரத்தினம் மேளவாத்தியம் சகிதம் அணிநடையில் அழைத்து வரப்பட்டார்.

காலை 9 30 மணிக்கு ஆரம்பமான முதலாவது அமர்வில் கலாநிதிப் பட்டம், கல்வியியல் பட்டப்பின் கல்வித் தகைமைச் சான்றிதழ், ஆங்கில மொழி கற்பித்தலின் பட்டப்பின் தகைமைச் சான்றிதழ், மருத்துவ சத்திர சிகிச்சை மாணி, வர்த்தக மாணி ஆகிய பட்டங்களும்—

11.30 மணி அளவில் ஆரம்பமான இரண்டாவது அமர்வில் முது விஞ்ஞான மாணி, விஞ்ஞான மாணி, தொழில் நிர்வாக மாணி ஆகிய பட்டங்களும்—

நண்பகலுக்குப் பின்னர் ஆரம்பமான மூன்றாவது அமர்வில் முது மெய்யியல் மாணி, முது இசைக்கலை மணி, கலை மாணி, இசைக்கலை மணி, நாட்டியக் கலை

(6 ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**ST. JOHN'S COLLEGE**
JAFFNA

ஆண்டு பரிசளிப்பு விழா

**அழைப்பு**

காலம்: 01 – 10 – 1994
நேரம்: காலை 9-30 மணி
இடம்: பீற்றோ ஞாபகார்த்த மண்டபம்

பிரதம அதிதி:
அருட் கலாநிதி ஏ. ஜே. வி. சந்திரகாந்தன்
தலைவர் – கிறிஸ்தவ நாகரீகத்துறை
யாழ். பல்கலைக் கழகம்

பெற்றோர், பழைய மாணவர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

அதிபர், ஆசிரியர், மாணவர்.

[சி-9057]



வட இலங்கை
தொழில்நுட்பக் கல்லூரியின்
கணனி – இலத்திரனியல் – மனையியல்
**கண்காட்சி**

இன்றும் (11-09-1994) நடைபெறும்

★ பார்வையாளருக்கு விசேட புலமைப்பரிசில்கள் காத்திருக்கின்றன.

**North Ceylon Technical Institute**
14 St Peters Lane. Jaffna.
[சி/9099]



**பதவி வெற்றிடம்**

அலுவலக உதவியாளர்
**OFFICE ASSISTANT**

A/L படித்த ஆங்கில TYPING இல் நல்ல தேர்ச்சியும் BOOK KEEPING இல் அனுபவமும் உள்ள பெண்கள். தேவை 14-09-1994 புதன் காலை 9 00 – 1-00 மணி வரை சான்றிதழ்களுடன் நேரில் வரவும்.

**BOND கல்வி நிலையம்**
ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்
(7910)



**G. C. C.**
வைத்திய நிபுணர் ஆலோசனை நிலையம்
514/14, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.
(பழைய O. P. Dக்கு முன்பாக)

கண், காது, மூக்கு, தொண்டை (ENT), முறிவு, மகப்பேறு, சத்திர சிகிச்சை, சிறுபிள்ளைகளுக்குரிய வைத்தியம், சருமநோய்கள் என்பவற்றிற்கு விசேட வைத்திய நிபுணர்களினால் ஆலோசனை வழங்கப்பட்டு வருகின்றது. இத்துடன் மருத்துவ ஆய்வுகூட சேவைகளும் (B. C. G ) இங்கு நடைபெறுகின்றன.

நிர்வாகி

(32827)


## 3ஆம் ஆண்டு நினைவஞ்சலி



தோற்றம்:
06
10
1909

மறைவு:
15
09
1991

**அமரர் அம்பலவாணர் முத்தையா**
(சண்முகம்)

திதி: ஸப்தமி 11 – 09 – 1994

"ஆண்டுகள் மூன்று சென்றாலும், உங்கள் நினைவலைகள் என்றும் எம்மைவிட்டுநீங்கா"!

உங்கள் பிரிவால் துயருறும்:
மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்

"அன்னை இல்லம்"
இல: 74 காரைக்காட்டு லேன்,
வண். வட மேற்கு,
யாழ்ப்பாணம்.
[32833]

## புலிகளின் குரல் வானொலியில்

11 – 09 – 1994
ஞாயிறு இரவு

★ 8-01 — இசையரங்கம் பாடுபவர்: விஜயலட்சுமி இராமலிங்கையா
★ 8 20 — தாயகம் பாடல்கள்
★ 8-30 செய்திகள்
★ 8-40 தொடர் நாடகம் இலக்கை மண் – 39 ஆம் அங்கம்

12 – 09 – 1994
திங்கள் காலை

★ 7-02—மாவீர வணக்கம்
★ 7-15— நீங்கள் கேட்டவை
★ 7-30—செய்திகள்
★ 7-35—பத்திரிகைச் செய்திகள்
★ 7-40— நீங்கள் கேட்டவை நிகழ்ச்சியின் தொடர்ச்சி.

## தமிழீழ பொதுக் கல்வி தேர்வு

யாழ்ப்பாணம், செப். 11
தமிழீழ பொதுக் கல்வித் தேர்வின் மதிப்பீட்டுப் பணியில் ஈடுபட்ட கட்டுப்பாட்டுத் தேர்வாளர், முதன்மைத் தேர்வாளர், மதிப்பீட்டு நிலைய இணைப்பாளர் ஆகியோருக்கான கூட்டம் இன்று ஞாயிறு காலை 9 மணிக்கு வேம்படி மகளிர் கல்லூரியில் நடைபெறும். (இ)

## விளையாட்டு நிகழ்வுகள்

யாழ் மிகரவுண் தோட்டரங்கக் கழகம் மிகரவுண் தோட்டரங்கக் கழக கிண்ணத்துக்காக நடத்தி கிரிக்கெட் போட்டியின் இறுதியாட்ட நிகழ்வுகள் இன்று காலை 8. 30 மணிக்கு யாழ். இந்துக் கல்லூரி மைதானத்தில் ஆரம்பமாகவுள்ளது. டாக்டர் எஸ். பி. ஆர் சிர்மாறன் நிகழ்ச்சியை தொடக்கிவைப்பார் (ஐ)


இப்பொழுது நடைபெறுகிறது
**A/L DAY CLASS**
A/L 94
பரீட்சைக்குத் தோற்றியவர்களுக்காக
(மாதாந்த பயிற்சிப் பரீட்சைகளும்)

**BOND**
கல்வி நிறுவனம்
58 A,
ஸ்ரான்லி வீதி.
யாழ்ப்பாணம்.
[7908]



**O/L 94**
மாதிரி வினாத்தாள்கள்

பரீட்சைக்கான [பகுதி I, II] மாதிரி வினாத்தாள்கள் [விடைகளுடன்] BOND நிறுவனத்தால் வெளியிடப்பட்டுள்ளன. தனியார் கல்வி நிறுவனங்கள், பாடசாலைகளுக்கு விசேட கழிவு வழங்கப்படும்.

விவரங்களுக்கு
**BOND**
யாழ்ப்பாணம்.
[சி/9100]



கலை வர்த்தக கல்லூரி
**C. C. A.**
அறிவித்தல்

94 பரீட்சை எடுத்த மாணவர்களுக்கான புள்ளி வழங்கல் திட்டம் தொடர்பான விளக்கம்

பொருளியல்:
திங்கள் (12-09 94)
காலை 9 மணி

கணக்கியல்:
திங்கள் (12 09 94)
மாலை 4 மணி
நிர்வாகி

(சி-9160)


1921ஆம் ஆண்டு செப்ரெம்பர் 11ஆம் திகதி நள்ளிரவுக்குப் பின் 1-30 மணிக்கு மகாகவி பாரதியார் இறந்தபோது அவருக்கு வயது 40 முடியவில்லை

நாற்பது ஆண்டுகளில் அவர் ஈட்டிய சாதனைகள் நூற்றாண்டு காலம் நிலைத்து நிற்கும் தன்மையுடையன.

தமிழ் மக்களுக்கு அவர் விட்டுச்சென்றுள்ளவைச்சொத்து பரம்பரை பரம்பரையாக தமிழ் மக்களின் வாழ்வுக்கு வழிகாட்டி ஒளியூட்டும்.

1882 ஆம் ஆண்டு டிசம்பர் 11 ஆம் திகதி தென்இந்தியாவில் எட்டயபுரத்தில் பிறந்த பாரதியார் 20 ஆம் நூற்றாண்டின் தலைசிறந்த தமிழ்க் கவிஞர் என்பதில் இன்று எள்ளத்தனையும் சந்தேகம் இல்லை.

இந்த நூற்றாண்டில் உலகத் தலை சிறந்த கவிஞர்கள் வரிசையிலும் அவர் இடம் பெறுவார்.

### நேர்மைக்கு மறுபெயர் பாரதி

சுதந்திரக் கவியான பாரதியாரின் கவிதைகளில் நேர்மை எப்பொழுதும் பளிச்சிடும் பாரதியாரின் வாழ்க்கை அத்தகையது;

அவர் சொல்லொன்று செயல் இன்னொன்றான வாழ்க்கை வாழவில்லை

அவருடைய தனிப்பட்ட வாழ்க்கைக்கும் கவிஞர் வாழ்க்கைக்கும் இடையில் முரண்பாடு கிடையாது.

கவிதையில், இலக்கியத்தில் நீதி, நேர்மை, நியாயம் பற்றிப்பேசி அதற்கு நேர்மாறான தனிப்பட்ட வாழ்க்கை முறையைக் கடைப்பிடிக்கும் அறிஞர்கள், கலைஞர்கள், கவிஞர்கள், அரசியல்வாதிகள்மற்றும் பெரும் புள்ளிகள்கூட்டத்தைச் சேர்ந்தவர் அல்லர் பாரதியார்.

அவருடைய வாக்கு ஒன்று! செயலும் ஒன்று! வாழ்வும் ஒன்று. நேர்மைக்கு மறுபெயர் பாரதியார் ஆவார். இதுவே பாரதியாரின் தனிச் சிறப்பு ஆகும்.

## இன்று (செப்ரெம்பர் 11) பாரதியார் தினம்

# விடுதலைக்கு எழுச்சிக் குரல் கொடுத்த அற்புதக் கவிஞர்

நவீன தமிழ் இலக்கியத்தின் ஊற்றுக் கண்களைத் திறந்து விட்டவர் பாரதியார்.

கவிஞர் பாரதியார் சிறந்த பத்திரிகையாளர், மொழிபெயர்ப்பாளர், கட்டுரையாளர் இன்னும் பல...

### மக்கள் நேசன்

மக்களை மனமார நேசித்தது பாரதியார் என்ற கவிஞனின் பலமான பண்பாகும். மக்களின் அவலங்களைத் தமதாகக் கொண்டு "நெஞ்சு பொறுக்குதில்லையே" என்று வெதும்பி மனம்நொந்த மக்கள் கவிஞர் அவர்.

பாரதியார் தமிழ் நாட்டினதும் இந்திய உபகண்டத்தினதும், கிழக்கினதும் மேற்கினதும் முன்னேறிய சிந்தனைகளை உள்வாங்கி தமிழ் இலக்கியப் பெருவெளியை செழிப்பித்த கவிஞர் ஆவார்.

கவிஞர் பாரதியார் என்ற சிந்தனையாளர் மன்பதை மண்ணுலகில் இன்புற வாழ விரைந்த இலக்கியப் படைப்பாளி.

அவருடைய படைப்புகளின் அடிநாதம் — அவை எவையாயிருந்தாலும் விண்ணுலகு என்பது மண்ணுலகில் தோன்றிவிட வேண்டும் என்பதே ஆகும்.

பாரதியாரின் அதீத மொழிப்பற்றும், தேசப்பற்றும் மற்றவர்களைக் குறைத்துப் பார்த்து அவமதிக்கும் போக்குடையது அல்ல.

### பரந்த பார்வை

"மகாகவி பாரதியார் மொழிபெயர்த்த தாகூர் சிறுகதைகள்" என்ற நூலின் முதற்பதிப்பிற்கு அவர் எழுதியுள்ள முன்னுரை வாசிக்க



வாசிக்க பாரதியாரின் உலகளாவிய பரந்த பார்வையைக் காட்டுகிறது.

பாரதியார் கூறுகிறார்:

"மற்ற பாஷைகளின் இலக்கியங்களை தமிழில் மொழிபெயர்ப்பதைப் பற்றி இங்கு சற்று சொல்வோம். தமிழர்களில்பெரும்பாலோர் அன்னிய இலக்கியங்களில் உள்ள அருமையான நூல்களை அறிய முயல்வதில்லை.

எல்லாம் தம் நூல்களில் இருக்கின்றன; வெளியிலிருந்து நாம் ஒன்றும் கற்றுக்கொள்ள வேண்டியதில்லை என்று சொல்வது போலிதேசபக்தியும் குறுகிய நோக்கமும் உடையவர்களின் செயலே அன்றி வேறல்ல...

கிணற்றுத் தவளை போல் இராமல் நம் குற்றங்களைத் தெரிந்து கொள்வது நம்மைத் திருத்திக்கொள்ளும் வழியில் முதற்படியாகும்.

பாரதியார் மறைந்து தற்பொழுது 73 ஆண்டுகள் கழிந்துவிட்டபோதும் அவருடைய கவிதைகளும் கருத்துக்களும் இன்னும் இளமையாகவே இருக்கின்றன.

### விடுதலைக் கவிஞன்

அடிமைத் தளைகள் அற்ற விடுதலை வாழ்வுக்கு தமது அற்புதக் கவிதைகளால் குரல் எழுப்பிய பாரதியார் பெண்கள் விடுதலை பற்றிப் பாடிய பாடல்கள் இன்றும் தமிழ் இலக்கியப் பரப்பில் மிகவும் சிறப்பானவையாக உள்ளன.

பாரதியாரின் கவிதாசிகளைக் கூறியும், சிலவேளைகளில் தம் நிலை மறந்து மமதை மேற்கொண்டு பாரதியாரையும் தாம் மீறியவர்கள் எனச் சொல்லியும் வந்த தமிழ்க் கவிஞர்கள் பலரை இலக்கிய உலகம் ஏற்கனவே இனங்கண்டுள்ளது.

பாரதியாரை விஞ்சிய கவிஞன் எமது காலத்தில் இன்னும் தோன்றவில்லை என்பது இப்பொழுது மேலும் மேலும் தெரியவருகிறது ★

## இளங்கலைஞர் மன்றத்தில் இன்று நடக்கும் பாரதி விழா

யாழ்ப்பாணம், செப் 11
நல்லூர் இளங்கலைஞர் மன்றத்தில் இன்று ஞாயிற்றுக்கிழமை காலையும் மாலையும் பாரதிவிழா நடைபெறும்.

கவிஞர் இ. முருகையன் தலைமையில் நடைபெறும் காலை நிகழ்ச்சியில் யாழ். மாவட்ட அரசியல் துறைப் பொறுப்பாளர் திரு இளம்பரிதி, மகளிர் அமைப்புத் துணைப் பொறுப்பாளர் செல்வி தமிழவள், மேலதிக அரசாங்க அதிபர் திருமதி பி. எஸ். திசைநாயகம், வேம்படி மகளிர் கல்லூரி ஆசிரியை செல்வி கலாநிதி சண்முகநாதபிள்ளை ஆகியோரின் இலக்கிய உரைகளும், கவியரங்கும் இடம்பெறும்.

பேராசிரியர் ஆ. சண்முகதாஸ் தலைமையில் நடைபெறும் மாலை நிகழ்ச்சிகளில் கவிஞர் எஸ். சண்முகலிங்கனின் "உயிரின் குரல்" ஆக்க இசை அரங்கம், திரு. பொன். சுந்தரலிங்கத்தின் பாட்டு, நடன நாடகம், பாஞ்சாலி சபதம் நாடகம் ஆகியன இடம்பெறும். (க-17)

## தென்னிந்திய திரைப்படங்களான எஜமான், தேவர்மகன்; தனியார் திரையிடத்தடை

### கொழும்பு நீதிபதி உத்தரவு

கொழும்பு, செப், 11
எஜமான், தேவர்மகன் ஆகிய தமிழ்ப்படங்களை இலங்கையில் திரையிடக்கூடாதென்று கொழும்பு மேலதிக மாவட்ட நீதிபதி கே. யோசநாதன் உத்தரவிட்டிருக்கிறார்.

குறிப்பிட்ட இருபடங்களையும் தங்கராஜா அர்ஜுனா என்பவர் திரையிடுவதற்கே இத்தடை விதிக்கப்பட்டுள்ளது.

தேசிய திரைப்படக் கூட்டுத்தாபனத்தைத் தவிர வேறு எவரும் தமிழ்ப்படங்களை இறக்குமதி செய்வது தடை செய்யப்பட்டுள்ளது என்று கூட்டுத்தாபனம் தாக்கல் செய்த மனு மீதே நீதிமன்றம் இந்த உத்தரவைப் பிறப்பித்துள்ளது. [ஜஎ]-

## பிரிட்டிஷ் அரசு வழங்கியிருந்த வைத்திய உபகரணங்கள் இங்கு வந்து சேர்ந்தன

யாழ்ப்பாணம், செப் 11
யாழ். மாவட்டத்திலுள்ள அரசினர் வைத்தியசாலைகளுக்கு பிரிட்டிஷ் அரசாங்கத்தினால் அன்பளிப்புச் செய்யப்பட்ட வைத்தியசாலை உபகரணங்களின் ஒரு தொகுதி வடபிராந்திய சுகாதாரத் திணைக்களத்திற்கு கிடைக்கப் பெற்றுள்ளது.

கடந்த செவ்வாய்க்கிழமை பருத்தித்துறைக்கு வந்த 'பிளம்பயான்' கப்பலில் இவ் உபகரணங்கள் எடுத்துவரப்பட்டுள்ளன. றபர்சீற், ஸ்ரெச்சர்கள் உட்பட 52 விதமான வைத்திய உபகரணங்கள் அவற்றில் அடங்கியுள்ளன.

இதேவேளை ஜெனரேற்றர்கள் உட்பட மேலும் பல உபகரணங்கள் இங்குகொண்டுவருவதற்காக கொழும்பு துறைமுகத்தில் வைக்கப்பட்டுள்ளதாக தெரியவந்தது

## சந்திரிகா கொலை முயற்சி வெறும் கட்டுக்கதையாம்

கொழும்பு, செப். 11
கண்டியில் வைத்து பிரதமர் சந்திரிகாவை கொலை செய்யச் சதி நடந்ததாகக் கூறப்பட்ட சம்பவம் வெறும் கட்டுக்கதை என்று சி. ஐ. டி. விசாரணையில்தெரியவந்துள்ளது.

இதுதொடர்பாக கைதான சந்தேகநபர் மீது சட்ட நடவடிக்கை எடுப்பதுகுறித்து பொலிஸார் சட்டமா அதிபர் திணைக்களத்துடன் ஆலோசித்து வருகின்றனர் ... பிரதமர் தலதாமாளிகைக்கு செல்லும்போது குண்டு பொருத்தப்பட்ட வீடியோக் கமராவைப் பயன்படுத்தி அவரைக் கொல்லும்படி சிலர் தம்மை நிர்ப்பந்தித்ததாகவே தான் சந்தேகநபர் பொலிஸில் தெரிவித்திருந்தார். இதனை அடுத்து பொலிஸார் தங்கள் விசாரணையை நடத்தினர்.

விசாரணை முடிவில் சந்தேகநபர் கூறியவற்றில் உண்மை ஏதும் இல்லை என்பதை பொலிஸார் கண்டுபிடித்தனர் என்று தெரிவிக்கப்படுகிறது. (கு-எ)


எமைப் பிரிந்து ஓராண்டும் சென்றதுவோ
**செல்வி பார்வதியம்மா செல்லையா**
(பட்டு)
(யாழ்ப்பாணம் வட்டப்படிப்புகள் கல்லூரிமாணவி)
தோற்றம்: 06-02-1963 மறைவு: 21-09-1993

பட்டு உன்விழி சார்ந்த உன்மொழிகேட்டு ஆண்டொன்று ஆனதம்மா
ஆண்டொன்று ஆனாலும் தேறவில்லை- நெஞ்சங்கள் ஓயவில்லை உன் நினைவலைகள்

11-9-94 ஞாயிற்றுக்கிழமை எமது இல்லத்தில் நடைபெறும் மதிய போசனத்தில் மாணவர்கள், உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் கலந்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறோம்.

உன்பிரிவால் துயருறும்
அம்மா, அண்ணா, அக்கா, தந்தை, அத்தான், பிள்ளைகள்

மாகியப்பிட்டி,
சண்டிலிப்பாய்.
(7637)



JAFFNA COLLEGE · CEYLON

**யாழ்ப்பாணக் கல்லூரி**
**வட்டுக்கோட்டை**
**பிரவேசம் – 1995**

பின்வரும் வகுப்புகளில் மட்டும் வெற்றிடங்கள் உண்டு.

ஆண்டு ஒன்று. ஆண்டு ஆறு, க. பொ. த. (உ/த) விஞ்ஞானப் பிரிவு.

விண்ணப்பங்கள் ஏற்கப்படும்
இறுதி நாள் 07 – 10 – 1994.

அ. விண்ணப்ப படிவங்களை 09 – 09 – 1994 முதல் 06 – 10 – 1994 வரை பெற்றுக் கொள்ளலாம்.

ஆ. விண்ணப்பப் படிவங்களுடன் பிறப்பு அத்தாட்சிப் பத்திரம் (போட்டோ பிரதி) இணைக்கப்பட வேண்டும். பிழையாகவோ அன்றி பூரணமாகவோ நிரப்பப்படாத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

விண்ணப்பப் படிவங்களை சனி, ஞாயிறு, விடுமுறை தவிர்ந்த ஏனைய நாட்களில் காலை 9. 00 மணி முதல் பிற்பகல் 1. 00 மணி வரை கல்லூரியில் படிவமொன்றிற்கு ரூபா 100/- செலுத்திப் பெற்றுக் கொள்ளலாம்.

க. பொ. த. (உ/த) வகுப்பிற்கு அவரவர் பாடசாலை அதிபரினால் உறுதிப்படுத்தப்பட்ட க.பொ.த. (சா/த) பெறுபேறுகள் சமர்ப்பிக்கப்பட வேண்டும்.

வயதெல்லைகள்:-

அ. ஆண்டு 1 — விண்ணப்பதாரி 01-02-1989 இற்கும் 31-01-1990 இற்கும் இடையில் பிறந்திருக்க வேண்டும்

ஆ. ஆண்டு 6 — விண்ணப்பதாரி 01-02-1984 இல் அல்லது அதற்குப் பின் பிறந்திருக்க வேண்டும்.

பிரவேசப் பரீட்சை:-

அ. ஆண்டு ஒன்றுக்கான நேர்முகப் பரீட்சை 29 – 10 – 1994 காலை 9. 00 மணிக்கு ஆரம்பமாகும்.

ஆ. ஆண்டு ஆறு வகுப்புக்கு 22 – 10 – 1994 காலை 8. 30 மணிக்கு ஆரம்பமாகும். கணிதம், ஆங்கிலம், தமிழ் ஆகிய பாடங்களில் எழுத்துப் பரீட்சை நடைபெறும்.

அதிபர்
யாழ்ப்பாணக் கல்லூரி

(சி/9164)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னஞ்சிறு விளம்பரம்

## விற்பனைக்கு

ஒன்றரை வயது நிரம்பிய இலைப்பு நிற பெண் பொமரேனியன் நாயும், அல்சேஷன் நாய்க்குட்டிகளும் விற்பனைக்குண்டு. நடராசா, குலேந்திரன் வீதி, ஆசைப்பிள்ளையின் ஒழுங்கை, பலாலி றோட், கோண்டாவில். (32802)

எம்மிடம் புத்தம் புதிய இரு மாட்டு வண்டிகள் விற்பனைக்கு உண்டு. ஒன்று தட்டி பெட்டி வண்டி. ஒன்று தட்டி வண்டி. 17" ரயர் உள்ளவை. நேரில் பார்வையிடவும். தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி: வேலமுகன் காம்பெவர், கன்னாகம். (7632)

அலுமாரிகள், சோக்கேஸ், கட்டில்கள், டபிள் செற்றிகள், கடை றாக்கை, சாப்பாட்டு மேசை, கதிரைகள், வாங்குகள், விருக், பிரம்பு வகைகள் விற்பனைக்குண்டு. ராஜன் பிள்ளை அகம், 286, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம். (வானவில் அருகில்) (சி-9049)

இலவிருத்திக்கேற்ற நான்கு மாதம் நிரம்பிய யமுனாபாரி கடாய் குட்டிகளும், பால் எடுக்கும் தாய் ஆடும் விற்பனைக்குண்டு. A. கனகசிங்கம், இல 214, பருத்தித்துறை வீதி, ஆனைப்பந்தி, யாழ்ப்பாணம். (32801)

பத்து நாட்கள் வளர்ச்சி அடைந்த Prima (பிறிமா) புறொயிலர் இறைச்சிக்குஞ்சுகள் உடன் விற்பனைக்குண்டு. உடுவில் மகளிர் கல்லூரிக்கு முன் மல்வம் வீதியூடாக சிவம் லேன், உடுவில். (32806)

நல்லின ஜமுனாபாரி பால் ஆடுகள், கடாய்கள் விற்பனைக்குண்டு. நல்லூர் வீடியோ சென்ரர், 19, முருகேசர் ஒழுங்கை, முத்திரைச் சந்தையடி, நல்லூர். (32805)

சிறந்த இன அல்சேஷன் கறுப்பு நாய்க்குட்டிகள் விற்பனைக்குண்டு. தொடர்பு: இல. 17, மார்டீன் வீதி, யாழ்ப்பாணம். [32818]

## வீடு விற்பனைக்கு

கொக்குவில் கிழக்கு, நாமகள் ஒழுங்கையில் மூன்று பரப்புக் காணியுடன் வீடு விற்பனைக்குண்டு. தரகர் தேவையில்லை. தொடர்பு; ந. அருணாசலம், நாமகள் ஒழுங்கை, கொக்குவில் கிழக்கு. (32821)

இருபாலை கோண்டாவில் றோட்டில் அனாதைச் சிறுவர் இல்லப் பூங்காவிற்குப் பக்கத்தில் கோப்பாய் ஆசிரிய கலாசாலைக்கும், மகாவித்தியாலயத்திற்கும் அண்மையிலுள்ள நிலப்பரப்பு 8 கொண்ட மாடி வீடு விற்கப்படும். நேரில் வரவும். நாகபூஷணி குமாரசாமி. [7901]

## சிறுகதைகள்

வெள்ளிடபாநாசம். இந்த நூற்றாண்டின் ஈழத்து சிறுகதை முதல் தொகுதி. ஒரு கூட கொழுந்து இந்த நூற்றாண்டின் ஈழத்து சிறுகதை இரண்டாம் தொகுதி செ. யோகநாதன் விற்பனையாகிறது. பூபாலசிங்கம் புத்தக நிலையம், யாழ்ப்பாணம் [சி-9159)

## புறொயிலர் விற்பனைக்கு

Broiler இறைச்சிக்கோழிகள் விற்பனைக்குண்டு சுத்தம் செய்து கொடுக்கப்படும். தொடர்பு: இல. 392, பிரதான வீதி, யாழ்ப்பாணம். (பஸ்நிலைய சந்தி) [22809]

## இறைச்சிக் கோழி

புறொயிலர் இறைச்சிக் கோழி புதன், சனி, ஞாயிறு தினங்களில் சுத்தம் செய்து பெறுக் கொள்ளலாம் 382, மணிக்கூட்டு வீதி, யாழ்ப்பாணம் (வெலிங்டன் சந்தி அறிவகம் அருகில்) (32743)

## தேவை

பெஷிங் மெஷின்டர், கொப்பசின்டர் தேவை. நேரில் வரலாம். இருபாலரும் தேவை. 87, பிரதான வீதி, கன்னாகம். (7628)

ஆங்கில சுருக்கெழுத்தாளர் பயிற்சி பெறும் மாணவர்களுக்கு வார நாட்களில் ஆங்கில மொழி பேசுக்கக்கூடிய 5 வருட கற்பித்தல் அனுபவமுள்ள பயிற்றப்பட்ட ஆசிரியர் தேவை. 16 09-94 ற்கு முன் விண்ணப்பிக்கவும். செயலாளர், வடமராட்சி சுருக்கெழுத்துக்கழகம், வதிரி, கரவெட்டி. [32808]

## மணமக்கள் தேவை

செவ்வாய்க் குற்றமற்ற 36 வயது B Com., 34 வயது B Sc. ஆசிரியருக்கும், 33வயது டாக்டருக்கும், பிரான்ஸில் உள்ள 38, 36 வயது கந்தோர் லிக்கர்களுக்கும், 30 வயது A.M.O. பெண்ணுக்கும் தேவை மங்கள ஏஜென்சி, கொய்யாத்தோட்டம். [32817]

## மணமகள் தேவை

38 வயது, மிாக சிரிடம் ஆசிரியருக்கு A/L விஞ்ஞானம் அல்லது கணிதம் படித்த தொழில் பார்க்காத பெண்ணும், 33 வயது, உச்சுக்கினி கனடா பிரஜாவுரிமை உள்ள வருக்கு மணப்பெண்ணும் தேவை. இலங்கையில் திருமணம் செய்து அழைத்துப் போகலாம். ஜாதகத்துடன் தொடர்புகொள்ளவும். இல. 950, மே/பா உதயன். [7909]

## மணப்பெண்கள் தேவை

வயது 43, தனியார் உத்தியோகத்தருக்கு ஏதாவதொரு குறைபாடுள்ள, கருப்பை உட்பட, சேவையுள்ளம் கொண்ட மணமகள் மறுமணத்திற்கும், வயது 41, வர்த்தக உத்தியோகத்தருக்கு தொழிலுள்ள மணமகளும் தேவை. வெளிநாட்டு பிரயாண வசதியுண்டு. முழுவிபரத்துடனும் ஜாதகத்துடனும் உரியவர் மட்டும் புதன்கிழமைக்குள் கிடைக்க விண்ணப்பிக்கவும். இல. 689, மே/பா உதயன், யாழ்ப்பாணம்; (32736)

## அனுமதிப் பரீட்சை

ஆண்டு - 6 மாணவர்களை பாடசாலைகளுக்குத் தேர்ந்தெடுப்பதற்கான பரீட்சைக்குரிய பயிற்சி வினாத்தாள்கள் (கணிதம், தமிழ், ஆங்கிலம்) ஒவ்வொரு ஞாயிறும் எம்மால் வெளியிடப்படும். விடையளித்துத் தந்தால் திருத்திக்கொடுக்கப்படும். Bond, 58A, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம். [7744]

## மணிக்கூடுகள்

உங்கள் பாவித்த நல்ல நிலையில் உள்ள மணிக்கூடுகள் உதிரிப் பாகத்திற்காக விற்று நீங்கள் விரும்பும் நல்ல நிலையில் உள்ள வேறு மணிக்கூடுகள் மாற்றிப் பெற்றுக் கொள்ளலாம். சகல மணிக்கூடுகள், றேடியோக்கள் உத்தரவாதத்துடன் திருத்திப் பெற்றுக் கொள்ளலாம்: டிக்கா வாச் அன் றேடியோ வேர்க்ஸ், ஆரியகுளம் சந்தி (வானவில் அருகில்), யாழ்ப்பாணம். (சி-9042)

## ஆண்டு - 4

ஆண்டு 4 மாணவர்களுக்கு புலமைப் பரிசில் [1995] மாதிரிப் பயிற்சி வினாத்தாள் 11-09-94 ஞாயிறு வெளியிடப்படும். தேவையானோர் தொடர்பு: ஆண்டு 4 இற்கு நாளாந்தம் [Weekend] சனி, ஞாயிறு வகுப்புகள் ஆரம்பமாகியுள்ளன. புதிய மாணவர் சேர்த்துக்கொள்ளப்படுவர். புதிய கல்வி நிலையம், 219 நாவலர் வீதி, யாழ்ப்பாணம். (32815)

## DRESS MAKING

விரும்பிய எல்லாவித ஆடைகளும் வெட்டித்தைப்பதற்கும் கைவினைக் கலைகள் ஆகியன 8 மாதப்பயிற்சி இராமநாதன் கல்லூரியில் நடைபெறுகின்றன. விரும்பியோர் சேர அனுமதி பெறவும். [7636]

## தவறிவிட்டது

6 9 94 அன்று யாழ் ஆஸ்பத்திரிக்கு ஒப்றேஷனுக்குச் சென்றபோது ஆஸ்பத்திரிக்கும், கல்லாகத்திற்கும் இடையில் தங்கச்சங்கிலி தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் இரக்கசிந்தனையோடு ந. சரவணபவான், ஐயனார் கோயில் ஒழுங்கை, சுன்னாகம் எனும் விலாசத்தில் ஒப்படைக்கவும். [7635]

நல்லூர் ஆலய முன்றலில் மூன்று ஜாதகக் குறிப்புகளும், ஓர் மூக்குக்கண்ணாடியும் அடங்கிய சிறிய பையொன்று 9-9-94 அன்று தவறிவிட்டன. தயவுசெய்து கண்டெடுத்தவர்கள் இல. 37, சோமசுந்தரம் அவனியு, சுண்டிக்குளி என்ற முகவரியில் ஒப்படைக்கும்படி மிகத் தாழ்மையாகக் கேட்டுக் கொள்கிறேன். [32820]

UNIVERSITY OF JAFFNA
POST-GRADUATE DIPLOMA IN PUBLIC ADMINISTRATION

Post-graduate Diploma in Public Administration, Admission test will be held on 17-09-94; Viva Voce/Interview on 24-09-94 Please bring all certificates etc Lectures start on October 01, 1994.

— REGISTRAR

(C-9094)

## 31ஆம் நாள் நினைவலைகள்



புங்குடுதீவு
அமரர் பரமசாமி பகேந்திரன்
(ஓய்வு பெற்ற அரசாங்க எழுதுவினைஞர்)

மலர்வு: 1950 — 01 — 21 | உதிர்வு! 1994 — 08 12

அன்பைச் சொரிந்து அறிவு வழிகாட்டி இன்பமாய் நாம் வாழ இனிய செயல் புரிந்த உன்னோடு சேர்ந்து உயர்வாக இருந்ததனை எந்நாளும் மறவோம் நாம்.

எம் தலைவரின் இறுதிச் சடங்கில் கலந்தும், எமக்கு அனுதாபம் தெரிவித்தும் எங்கள் துயரத்தில் பங்கு கொண்ட உற்றார், உறவினர், நண்பர்கள் எல்லோருக்கும் எமது இதய பூர்வமான நன்றியறிதலைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

இன்று (1994 - 09 - 11) காலை 10-30 மணியளவில் எமது இல்லத்தில் நடைபெறவுள்ள வீட்டுக்கிருத்திய நிகழ்வில் பங்கு கொண்டு அன்னாரின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்குமாறு வேண்டுகின்றோம்.

மனைவி, மக்கள், சகோதரன், மாமி, மைத்துனர்.

சோதிவு வீதி, நாவற்குழி, கைதடி.

# விக்னா கல்வி நிறுவனம்

52, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்,

A/L 94 இல் பரீட்சைக்குத் தோற்றிய மாணவருக்கான

**DAY CLASS**

ஆரம்பம்: 12-09-1994 திங்கள்

அனுபவமும் ஆற்றலுமிக்க ஆசிரியர் குழு

| | |
|---|---|
| பொருளியல் | — திரு. க. கலாகரன் |
| கணக்கியல் | — திரு. எஸ். கே. பிரபாகரன் |
| வர்த்தகம் | — திரு. ரி. வரதன் |
| அளவையியல் | — திரு. விக்கி |
| | — திரு. பிரபா |
| இந்துநாகரிகம் / இந்துசமயம் | — திரு. காரை. சுந்தரம்பிள்ளை |
| தமிழ் | — திரு. குழந்தை |
| புவியியல் | — திரு. குணராஜா |
| அரசியல் | — திரு. சீலன் |
| வரலாறு | — திரு. ஸ்ரீதரன் |
| நாடகமும்- அரங்கியலும் | — திரு. சதீபா |
| கிறிஸ்தவம் | — திரு. தனேஸ் |

குறிப்பு:

★ வாரத்தில் ஒவ்வொரு பாடமும் ஆறு மணித்தியாலங்களுக்கு குறையாதவாறு பயிற்சிப் பரீட்சைகளுடன் நடத்தப்படும்.

★ முழு அலகுகளும் கடந்த கால வினாக்களுடனும் மேலதிக விளக்கப் பயிற்சிகளுடனும் விரிவாக மீட்டல் செய்யப்படும்.

★ அனுமதிகளை முன் கூட்டியே நேர அட்டவணையுடன் அலுவலகத்தில் பெற்றுக் கொள்ளவும்.

[சி-9032]

## மூன்றாம் ஆண்டு நினைவஞ்சலி



மண்ணில்: 08 — 12 — 1934 | விண்ணில்: 11 — 09 — 1991

அமரர்
வேலாயுதர் பெரியதம்பி சுந்தரலிங்கம்

ஆண்டுகள் மூன்று கடந்திடினும்
ஆறாது உம் நினைவு எம் உளத்தில்
வேண்டுதல் செய்கின்றோம் விண்ணினிலும்
வெற்றியுடன் வீற்றிருப்பீர் அமைதி கொள்வோம்.

"நெருநல் ஒருவன் இன்றில்லை என்னும் பெருமையுடைத் திவ்வுலகு"
—குறள்

அன்னாரின் பிரிவால் துயருறும்!
செல்வரத்தினம் குடும்பத்தினர்.

393, கோவில் வீதி,
நல்லூர். [32816]

## துர்க்கா பாடசாலை சேவை த1-6015

## அறிவித்தல்

எமது மேற்படி உடுவில்-யாழ்ப்பாண பாடசாலை சேவை 12-09-94லிருந்து வழமைபோல் நடைபெறும் என்பதை மகிழ்ச்சியுடன் அறியத் தருகிறேன். இடநெருக்கடியைத் தவிர்க்குமுகமாக உங்கள் பெயர்களை மருதனார்மடம் கதிர் பலசரக்கு மாளிகையில் பதிவு செய்து கொள்ளுங்கள்.

வ. பலராமன்

[7634] (நாதன் உரிமையாளர், இணுவில் கிழக்கு)

## 10ஆம் ஆண்டு நீங்காத நினைவலைகள்



மலர்வு: 18 — 07 — 1940 | உயிர் பறிப்பு: 11 — 09 — 1984

கனகரத்தினம் ஜெயசிங்கம்
(இயக்குநர், கொமிக்கோ இன்டஸ்ரீஸ் அன்ட் ஏஜன்சிஸ்)

"தெய்வத்துடன் சங்கமமான எங்கள் குலவிளக்கின் நினைவலைகள் என்றும் நிலைக்கும்.

மனைவி, மக்கள், உடன்பிறப்புகள்.

மூளாய் றோட், சுட்டுவிளையை.

[7902]

# MATHS CENTRE
NELLIADY

**A/L 94**

பரீட்சைக்கு தோற்றிய மாணவர்களுக்கான வகுப்புக்கள்,

✲ பௌதிகவியல் — திரு. சோதிலிங்கம்
16 — 09 — 94 வெள்ளி பி. ப. 4-00

✲ இரசாயனவியல் — திரு. மணியம்
19 — 09 — 94 திங்கள் பி. ப. 1-00

✲ தூயகணிதம் / ✲ பிரயோககணிதம் — திரு. அருளானந்தம்
18 — 09 — 94 ஞாயிறு காலை 7-30

(சி/9097)

இணுவில்
## பரமானந்த சனசமூக நிலையம்
மேற்படி நிலையத்தின் நூல் நிலைய புனரமைப்புக்காக

**'ராஜன்ஸ்'**

இசைக் குழுவினர் வழங்கும்

# பொங்கும் தமிழமுதம்

களத்தில் காத்தான் புகழ் புதுவை அன்பனின் அற்புதப் படைப்பான

**'சதியை வென்ற சாவுகள்'**
(கேணல் கிட்டு வரலாறு கூறும்)
நாடகமும் இடம் பெறும்

இடம்: இணுவில் இந்துக் கல்லூரி
காலம்: இன்று 11 — 09 — 1994 (ஞாயிறு) மாலை 6-30 மணி

● அன்பளிப்பு: 500/-, 100/-, 20/-
● சிறுவர்களுக்கு: 10/-

★ குறிப்பு: தமிழீழ இசைக்குழுவின் நிகழ்வு தவிர்க்க முடியாத காரணத்தால் நிறுத்தப்பட்டு, பதிலாக ராஜன்ஸ் இசைக்குழு ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது.

[32824] — நிர்வாகம்.

# JAFFNA COLLEGE INSTITUTE OF TECHNOLOGY
VADDUKODDAI

**ADVANCED DIPLOMA IN COMPUTING**
**COMPUTER PROGRAMMING & DATA PROCESSING**
**TECHNICIAN DIPLOMA**
**DRAUGHTSMANSHIP**

மேற்குறிப்பிட்ட பாட நெறிகள் ஆரம்பமாகி விட்டன ஒரு சில வெற்றிடங்கள் இருப்பதனால் இம் மாதம் 15ஆம் திகதிக்கு முன் சேர்வதற்கு வாய்ப்புண்டு.

நேரில் விண்ணப்பிக்கவும்.

DIRECTOR,
J. C. I T.

VADDUKODDAI. [சி-9076]

யாழ்ப்பாண மாநகராட்சி மன்றம்

## தற்காலிக வேலை மேற்பார்வையாளர்
## பதவி வெற்றிடம்

யாழ்ப்பாண மாநகரசபை தற்காலிக அடிப்படையில் வேலை மேற்பார்வையாளர் பதவி வெற்றிடங்களை நிரப்பத் தீர்மானித்துள்ளது.

தகைமைகள்:

01. கல்வி:
க. பொ. த (சா. த) பரீட்சையில் இரண்டுக்கு மேற்படாத அமர்வுகளில் கணிதம், தமிழ்மொழி உட்பட ஆறு பாடங்களில் சித்தியடைந்திருப்பதுடன் இலங்கை தொழில் நுட்பக் கல்லூரியில் குடிசார் தொழில்துறை சார்ந்த தேசிய தொழில் நுட்பச் சான்றிதழ் அல்லது அதற்குச் சமமான சான்றிதழ் பெற்றிருத்தல் வேண்டும்.

02. வயது: 18 தொடக்கம் 45 வரை

03. யாழ்ப்பாண மாநகரசபையின் எல்லைக்குள் நிரந்தரமாக வசிப்பவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.

விண்ணப்பிக்க விரும்புவோர் மேற்குறித்த விபரங்களை உள்ளடக்கி தாமே தயாரித்த விண்ணப்பத்துடன் தமது தகைமைகளை நிரூபிக்கும் சான்றிதழ்களின் ஒளிப்படப்பிரதிகளையும் சேர்த்து 23-09-94 ஆம் திகதிக்கு முன்னர் கிடைக்கக் கூடியதாக 'ஆணையாளர்' மாநகரசபை யாழ்ப்பாணம், என்ற முகவரிக்கு தமது விண்ணப்பங்களை அனுப்புதல் வேண்டும்.

வே. பொ. பாலசிங்கம்
மாநகர ஆணையாளர்,
யாழ்ப்பாணம்.

மாநகரசபை அலுவலகம்
யாழ்ப்பாணம்.
09-09-1994

(சி 9095)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யாழ். மாவட்ட அமெச்சூர் மெய்வல்லுநர் சங்கம்
நடத்தும்

# யாழ். மாவட்ட கனிஷ்ட மெய்வல்லுநர் போட்டி - 1994

(09, 10, 11 - 09 - 1994)

## ஆரோக்கியம், வலிமை மிக்க சமூகத்தை உருவாக்க விளையாட்டு துறையிலும் மாணவரை ஈடுபடுத்துக!

### கலாநிதி எதிர்வீரசிங்கம் சமூகத்துக்கு விடுக்கும் செய்தி

பல்கலைக்கழக அனுமதிக்குத் தேவையான வெட்டுப் புள்ளிகளுக்கு மேலதிகமான புள்ளிகளைப் பெறுவதற்காக போதும் வராமலும் போக லாம். நாளைக்கு என்று ஒத்திப் போடாதீர்கள். நாளை என்பது வராமலே போக தொடர்ந்து உடற்பயிற்சி அல்லது ஏதேனும் விளையாட்டுக்களில் பங்குபற்றுவதும் வெற்றியீட்டுவதற்காக இருக்கலாம்.

ஆண்டு முழுவதும் வாரம் தோறும், ஐந்து அல்லது ஆறு தினங்கள் ஒரு மணித்தியாலப் பயிற்சியைச் செய்வதனால் கிடைக்கும் நன்மைகள் பல என்பதை எனது

யாழ். மாவட்ட அமெச்சூர் மெய்வல்லுநர் சங்கத்தின் ஏற்பாட்டில் இன்று நடைபெறும் யாழ் மாவட்ட கனிஷ்ட மெய்வல்லுநர் போட்டியை ஒட்டி முன்னாள் ஒலிம்பிக் வீரரான கலாநிதி நாகலிங்கம் எதிர்வீரசிங்கம் வெளியிட்டுள்ள விசேட செய்தி இங்கு பிரசுரமாகின்றது.

தற்போது தமது விடுமுறையைக் கழிப்பதற்காக அமெரிக்கா சென்றிருக்கும் கலாநிதி எதிர்வீரசிங்கம் "எமது நாளாந்த வாழ்க்கையில் விளையாட்டின் முக்கியத்துவம் பற்றி மாணவர்களுக்கு விடுக்கும் செய்தி" என்ற தலைப்பில் இந்தச் செய்தியை அனுப்பி வைத்துள்ளார்.

உயரம் பாய்தலில் ஆசிய சாதனையை நிலைநாட்டிய அவர் ஆசிய விளையாட்டுப் போட்டிகளில் முதலாவது தங்கப்பதக்கத்தை இலங்கைக்கு வென்றுதந்த சிறந்த ஒரு மெய்வல்லுநராவார்.

கனிஷ்ட மெய்வல்லுநர் போட்டி தொடர்பாக யாழ்.மாவட்ட அமச்சூர் மெய்வல்லுநர் சங்கத்துக்கு தாம் அனுப்பிய கடிதத்தில் அவர் குறிப்பிட்டுள்ள முக்கிய அம்சங்களாவன:-

★ இளம் மெய்வல்லுநர்கள் பங்குபற்றுவதற்கு இத்தகைய போட்டிகள் மூலம் வாய்ப்பளிப்பது குறித்து நான் மிகவும் மகிழ்ச்சி அடைகிறேன்.

★ பயிற்சி பெறுவதற்கு தேவை இருந்தால் மட்டுமே அவர்கள் பயிற்சி பெறுவார்கள், அந்தவகையில் பல மெய்வல்லுநர் போட்டிகள் இடம்பெறுவது மிகச் சிறந்ததாகும்.

★ மெய்வல்லுநர் சட்ட விதிகள் தொடர்பான இரண்டு பயிற்சி நெறிகளை யாழ். மாவட்ட அமெச்சூர் மெய்வல்லுநர் சங்கம் சிறப்பாக நடத்து முடித்திருப்பதை அறிந்து புளகாங்கிதம் அடைகிறேன். இத்தகைய பயிற்சி நெறிகள் குடாநாட்டில் மெய்வல்லுநர் துறையின் விருத்திக்கு உதவுவதோடு முழுவடமாராணத்துக்குமே ஒரு முன் மாதிரி செயற்பாடாக அமைந்துள்ளன.

★ போட்டியில் பங்குபற்றும் வீரர்கள் மற்றும் அதிகாரிகள் இந்த மூன்று நாட்களிலும் மெய்வல்லுநர் உலகின் மகிழ்ச்சியைப் பகிர்ந்து கொள்ள எனது வாழ்த்துக்கள் இந்த மூன்று நாட்களிலும் எனது எண்ணங்கள் இப் போட்டியின் மெய்வல்லுநர் நிகழ்ச்சிகளிலும் அதில் பங்குபற்றும் வீரர்களிலும், அவற்றை நடத்தும் அதிகாரிகளிலுமே இருக்கும்.


ஒலிம்பிக் வீரர்
கலாநிதி.
என். எதிர்வீரசிங்கம்

அனுபவத்தின் மூலமும் கல்வியின் மூலமும் நான் கண்டுகொண்டேன். அத்தகைய நன்மைகள் சில வருமாறு!

★ இளைஞராக வளர்ச்சி அடையும் ஒருவருக்குள்ள நாளாந்த பதற்ற நிலையை இத்தகைய பயிற்சி குறைக்கும்.

★ பிராணவாயுவை உள்ளெடுப்பதற்கான சுவாசப்பைகளின் கொள்ளளவு விருத்தி அடையும். படிப்பது, படித்ததை நினைவுபடுத்தி வைப்பது, பின்னர் அதனை மீட்டெடுப்பது — இவற்றிற்கு தேவையான கூடுதலான சக்


(5ஆம் பக்கம் பார்க்க)

வகுப்பு அறைகளுக்குள்ளும் தனியார் கல்வி நிலையங்களுக்குள்ளும் ஒவ்வொருவரும் அடைபட்டுக்கிடக்க வேண்டிய நிர்ப்பந்தத்தையே எமது கல்வி மற்றும் பரீட்சை முறைகள் ஏற்படுத்துகின்றன.

என்றாலும் நாளாந்தக் கடமைகளில் இருந்து விடுபட்டு ஒரு மணித்தியாலத்தை இன்னொரு காரியத்திற்கு ஒதுக்குவது முக்கியமானதாகும். அந்த ஒரு மணித்தியாலத்தில் உங்கள் வளவின் பின்னால், ஆலயம் மற்றும் தேவாலய சுற்றாடலில் வீதியில் அல்லது விளையாட்டு மைதானத்தில் 15 முதல் 20 நிமிடங்களுக்கு உடற்பயிற்சி செய்ய வேண்டும்; அடுத்த 20 முதல் 30 நிமிடங்களுக்கு ஏதாவது ஒ விளையாட்டிலும் அல்லது நிகழ்வுகளிலும் திட்டமிட்ட நாளாந்த வேலைத் திட்டத்தின் கீழ் பயிற்சி செய்ய வேண்டும்; கிடைக்கும் வசதிகளைப் பயன்படுத்த வேண்டும்; பயிற்சி தொடருங்காலையில் திட்டமிட்ட நாளாந்த வேலைத்திட்டத்தின் கீழ் பயிற்சிசெய்ய வேண்டும்.

சிறந்த வசதிகளுக்காகக் காத்திருக்க கூடாது அப்படியான நிலைமைகள் ஒரு லாம்.

நீங்கள் பயிற்சி பெறுவதன் நோக்கமும், அதனைத் ஒன்று வெற்றியீட்டுவதாக அல்ல; எனினும் பங்குபற்றுவதற்கான இலட்சியங்களில்



கனிஷ்ட மெய்வல்லுநர் போட்டியின் வெற்றிப் பதக்கங்களில் பொறிக்கப்பட்டுள்ள சின்னம்.

யாழ். மாவட்ட
கனிஷ்ட மெய்வல்லுநர் போட்டி - 1994

நிறைவு நாள் நிகழ்ச்சி

காலம்: 11-09-1994 ஞாயிற்றுக்கிழமை
நேரம்: பிற்பகல் 1-30 மணி முதல்
இடம்: யாழ். பல்கலைக்கழக மருத்துவபீட மைதானம்
தலைவர்: டாக்டர் ரி. டபிள்யூ ஜெயகுலராஜா
தலைவர், யாழ். மாவட்ட அமெச்சூர் மெய்வல்லுநர் சங்கம்
பிரதம விருந்தினர்: திரு. க. கந்தசாமி
யாழ். கல்விப் பணிப்பாளர், வலயம் II
கௌரவ விருந்தினர்: திரு பா. நடேசன்
பொறுப்பாளர், தமிழீழ காவல்துறை

## விளையாட்டுத்துறை ஊடாக நற்பண்புகளை வளர்ப்போம்!

### அமெச்சூர் சங்கத் தலைவர் அழைப்பு

பலவருடங்களாக நம் மண்ணில் ஏனைய விளையாட்டுகளிலும் பார்க்க மெய்வல்லுநர் துறை மிகவும் பாதிக்கப்பட்டு, கவனிப்பாரற்று போய்க் கொண்டிருந்ததை — அதுவும் கடந்த பத்து வருடங்களாக செயற்பாடுகள் குறைந்து சென்றதை — நாம் அவதானிக்க முடிந்தது.

பாடசாலையை விட்டு வெளியேறும் மாணவருக்கு உரிய வாய்ப்புகள் இல்லாமல் இருந்தது.

இளம் தலைமுறையினருக்கு இதனூடாகக் கிடைக்க வேண்டிய பல நற்பலன்கள் கிட்டாமற் போயின; ஒழுங்கு செய்திருக்கப்பட வேண்டிய பயிற்சி நெறிகளோ, போட்டி வாய்ப்புகளோ இடம் பெறவில்லை; எதுவித ஊக்குவிப்பும் இல்லை.

இந்தத் துர்ப்பாக்கிய நிலையைக் கருத்தில் கொண்ட — விளையாட்டுத் துறையில் உண்மையான ஆர்வமும் ஈடுபாடும் கொண்ட — சில கண்ணியம் மிக்க கனவான்கள் தமது பெறுமதி மிக்க நேரத்தையும் பணத்தையும் அர்ப்பணிப்போடு செலவிட்டு கடந்த வருட இறுதியில் யாழ் மாவட்ட அமெச்சூர் மெய்வல்லுநர் சங்கத்தை ஸ்தாபித்தனர்.

மெய்வல்லுநர் துறையை வளர்த்தல் —

போக்கால சூழலாக இருப்பினும் எமது இளைஞர் முயற்சிக்கு மெய்வல்லுநர் துறையில் சிறந்த பயிற்சியும், அறிவும் வசதியும் அளிப்பதன் மூலம் அவர்களை தேசிய ரீதியிலும் சர்வதேச மட்டத்திலும் முன்னணியில் திகழ வழி செய்தல் —

ஆகியன இந்தச் சங்கத்தை நிறுவியவர்களின் நோக்கங்களில் முக்கியமானவையாகும்.

இன்று பொய்மையும், போலிகளும், சந்தர்ப்பவாத - சுயநலன் செயற்பாடுகளும் பெருகிக் கொண்டு போவதைப் பார்க்கிறோம்; இத


யா. மா. அ.மெ. சங்க
தலைவர்
டாக்டர்
து. வி. ஜெயகுலராஜா

கைய விளைவுகளும் அனர்த்தங்களைப் பார்க்கிறோம். இத்தகைய செயற்பாடுகள் நம் சமுதாய மேம்பாட்டைச் சீர்குலைத்துவிடும்.

உண்மை, நேர்மை, கண்ணியம், நீதி, சமத்துவம் போன்ற சிறந்த பண்புகளை விளையாட்டுத் துறைக்கு ஊடாக நம் இளம் தலைமுறையினருக்கு சிறப்பான முறையில் ஊட்ட முடியும் என்பது எனது திடமான நம்பிக்கையாகும்;

பெறுமதிமிக்க இத்தகைய பல நற்பண்புகளை விளையாட்டுக்கு ஊடாக மிகுந்த கட்டுப்பாட்டுடனும் ஊக்கத்துடனும் ஒவ்வொரு கட்டத்திலும் புகுத்த நாம் திடசங்கற்பம் செய்துள்ளோம்.

விளையாட்டுத்துறை சார்ந்தவர்களிடம் நற்பண்புகளை ஒருபடி மேலாகவே எதிர்பார்க்கலாம் என்று கூறப்பட்டு வந்தது. முக்கிய வழக்கு ஒன்றிலே குற்றவாளி சிறந்த விளையாட்டு வீரன் என்பதைக் கருத்தில் கொண்டு அவன் அத்தகைய தவறைச் செய்திருக்கமாட்டான் எனத் தெரிவித்து அவனை விடுதலை செய்வித்தார் நீதிபதி.

ஆனால் இன்று வேதனைக்குரிய செயல்கள் நிகழ்ந்து வருகின்றன. விளையாட்டுத்துறையைச் சார்ந்தவர்களே தமது நற்பண்புகளைக் காற்றில் பறக்கவிட்டு சுயநலமிகளாகச் செயற்படுவதைப் பார்க்கிறோம், வேதனைப்படுகின்றோம்.

எனவே வீரர்களையும் விளையாட்டுத்துறை சார்ந்த ஏனையோரையும் சிறந்த பண்பாளர்களாக மிளிரச்செய்ய எம்மால் இயன்ற நல்லுழைப்பை வழங்குவோம்.

ஒலிம்பிக் விளையாட்டில் பங்குபற்றிய — சர்வதேச புகழ் மிக்க — வீரரான கலாநிதி நா. எதிர்வீரசிங்கம் தமது தாயகமண்ணுக்கு சேவை செய்வதற்காக வந்துள்ளார் அவர் ஒரு சிறந்த பண்பாளர்: அவரின்

(5ஆம் பக்கம் பார்க்க)

## வீரசாதனைகளைப் புரியும் வீரர்களை உருவாக்கும் பணி

### கௌரவ விருந்தினர் நடேசன் பாராட்டு

இன்றைய நிறைவு நாள் நிகழ்ச்சிகளில் கௌரவ விருந்தினராகக் கலந்து கொள்ளும் தமிழீழ காவல்துறைப் பொறுப்பாளர் திரு.பா. நடேசன், மெய்வல்லுநர் போட்டியை ஒட்டி வழங்கிய ஆசிச் செய்தி வருமாறு:-

தமிழீழ தாயகத்தின் எதிர்


காவல்துறைப் பொறுப்பாளர்
திரு. பா. நடேசன்

கால சிற்பிகளை உடல் வளத்துடனும், உளவளத்துடனும் பண்பட்டவர்களாக உருவாக்கும் நோக்குடன் எம் இனத்திற்கு பெருமை சேர்க்கும் பணிகளில் ஒன்றாக யாழ். மாவட்ட மெய்வல்லுநர் சங்கத்தின் 1994 ஆம் ஆண்டு கனிஷ்ட விளையாட்டுப் போட்டி நடைபெறுவதையிட்டு மகிழ்ச்சியடைகிறேன்.

இச்சங்கத்தின் சகல செயற்பாடுகளும் உன்னதமானதோர் சமுதாயத்தை கட்டியெழுப்புவதாக அமைய வேண்டும்; தேசப்பற்றுடன் பல வீர சாதனைகள் புரியும் வீரர்களையும், வீராங்கனைகளையும் உருவாக்க வேண்டும். இதன்மூலம் எம் தேசம் பெருமைப்பட வேண்டும்.

வரலாற்றுப் பெருமைமிக்க சுதந்திரப் போராட்ட சூழலில் யாழ். மாவட்ட மெய்வல்லுநர் சங்கம் இப்பணியை முன்னெடுப்பது பாராட்டிற்குரியது. இப்பணி மேலும்,

5ஆம் பக்கம் பார்க்க

யாழ். மாவட்ட அமெச்சூர் மெய்வல்லுநர் சங்கம் நடத்தும் முதலாவது யாழ். மாவட்ட கனிஷ்ட மெய்வல்லுநர் போட்டிகளின் நிறைவு நாள் நிகழ்ச்சி இன்று இடம் பெறுவதை ஒட்டி இந்த விசேட மலர் இங்கு பிரசுரமாகுகின்றது.

## சங்கத்தின் பணிகள் மேன்மேலும் சிறக்க வாழ்த்துகின்றேன்!

யாழ்ப்பாண மாவட்ட அமெச்சூர் மெய்வல்லுநர் சங்கம் எனனிடம் இச்செய்தியை வேண்டியிருப்பது எனக்கு இரட்டிப்பு மகிழ்ச்சியைத் தருவதாக உள்ளது.

யாழ்ப்பாண மாவட்ட விளையாட்டுத் துறையில் அத்துறை வீரனாகவும் — அத்துறை வளர்ச்சிக்குப் பங்களிப்புச் செய்தவனாகவும் என் பணி மூன்று தசாப்தங்களைக் கொண்டதாகும்.

யாழ். மாவட்ட விளையாட்டுத் துறை வளர்ச்சிக்கு நிறுவன ரீதியான அமைப்பு என ஒன்றைக் கோடிகாட்டுவதாயின் அது ஜெ. எஸ். எ. (Jaffna Sports Association) ஆகும். அன்று இத்துறை சார்ந்தவர்கள் ஏற்படுத்திக் கொண்ட அமைப்பு யாழ். மாவட்ட விளையாட்டுத் துறையை ஓர் ஒழுங்கமைப்பின் கீழ் வழி நடத்த உதவியது.

அன்று குடாநாட்டில் ஆங்காங்கே பல விளையாட்டுக் கழகங்கள் இயங்கி வந்தன. இக் கழகங்கள் அவைசார்ந்த பகுதியினரின் விளையாட்டுக்கு அல்லது அப்பகுதி மக்கள் ஈடுபாட்டிற்கு [illegible] கொடுத்து இயங்கின.

மெய்வல்லுநர் [illegible] நாட்டம், சரப்பந்தாட்டம், இவற்றைவிட பல சுதேசிய விளையாட்டுகளும் முதன்மைப் படுத்தப்பட்டன.

அன்றும் வீராப்புடன் செயற்பட்டு இன்றும் இயங்கி வருவது இரண்டு கழகங்களாகும்.

ஒன்று ஜொலிஸ்ராஸ் விளையாட்டுக்கழகம் மற்றையது அரியாலை ஐக்கியகழகமாகும் யாழ். மாவட்டத்தின் விளையாட்டு வரலாற்றில் இவ்விரு கழகங்களுக்கும் தனி இடம் உண்டு.

ஜெ.எஸ்.ஏ. [illegible]


கப்டன் சோமசுந்தரம்

## பிரதம விருந்தினரின் செய்தி

யாழ். குடாநாட்டில் மெய்வல்லுநர் நிகழ்ச்சிகளும் விளையாட்டுப் போட்டிகளும் மீண்டும் உற்சாகமாக நடைபெறத் தொடங்கி விட்டன. விளையாட்டுக் கழகங்களுக்கிடையிலான போட்டிகள், சனசமூக நிலையங்கள் நடத்தும் போட்டிகள், அரச செயலர் நடத்தும் போட்டிகள் யாவும் பலரின் பங்குபற்றலுடன் வெற்றிகரமாக நடைபெறுகின்றன. பாடசாலைகளிலும் இப் போட்டிகள் ஓரளவு ஒழுங்காகிவிட்டன.

இந் நிலையில் யாழ் மாவட்ட அமெச்சூர் மெய்வல்லுநர் சங்கம் கனிஷ்ட மெய்வல்லுநர் போட்டியை நடத்துவது எல்லா பட்டப் போட்டிகளுக்கும் ஊக்கத்தையும் முழுமையையும் கொடுக்கும் சம்பவமாகும். இப் போட்டியை நடத்தும் சங்கத்தினரைப் பாராட்டி வாழ்த்துகிறேன்.

மெய்வல்லுநர் போட்டிகள் பெரு விளையாட்டுப் போட்டிகள் மிக முக்கியமானவை. மக்களின் உடல், உள ஆரோக்கிய வளர்ச்சிக்கும், பண்பாட்டு வளர்ச்சிக்கும் உறுதுணையானது. யாழ். மாவட்டத்துப் பாடசாலை ஒன்றினது கீதத்தின் அடிகள் சில இவை!


கல்விப்பணிப்பாளர்
திரு. க. கந்தசாமி

"சிவப்பு மஞ்சள் பச்சைவெள்ளை - சீர்
உவப்புற நிறத்தார் கொடிகட்டிக்
கலையுடன் [illegible]
சாடும் போட்டிப் பேரேட்டில்
ஆதி சிறப்பாக மதிவொளியாக
அன்றதாய் இன்றும் புகழ் வீச
அழியாத வொழுக்கம் அதனாலே எழுப்பம்
ஆனவாக அன்றாடம் அமைத்தாடும்."

இன்னொரு பாடசாலை கீதத்தில்.

"வாழ்க்கை நிலையில் தளர்ந்திடும் போதும்
காக்க நும் நேர்மை, உண்மை தூய்மை,
விளையாடு தெளிநல் என்றும் சிறப்பாய்."

என்றும்.

".இதுவே சமயம் இணைந்த செயற்று
வீசு பந்தினை, ஆணும் ஆண்
சுய நலமின்றி பிரிவினையின்றி
மாண்பை நிருபி நல்விளையாட்டிலே"

என்றும் உள்ளன. முன்னைய கீதம் கரவெட்டி திரு. இருதயக் கல்லூரியினது.

உடுப்பிட்டி அமெரிக்கன் மிஷன் மகளிர் கல்லூரியினது; அடுத்தது மத்திய கல்லூரி மாணவர் இல்லக் கொடியின் மகுடவாசகம் இது:-

"வெற்றியோ தோல்வியோ

(5ஆம் பக்கம் பார்க்க)

குரியது. குறிப்பிடக்கூடிய செயற்பாடுகளைக் கொண்டி

(5ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
292/2 நாவலர் வீதி,
யாழ்ப்பாணம்

## தமிழ் வளர்க்க செயற்படுவோம்

புரட்சிக் கவி பாரதியின் நினைவு விழா இன்று குடாநாட்டின் பல பகுதிகளிலும் சிறப்பாகக் கொண்டாடப்படுகிறது. பாடசாலைகள், இலக்கிய மன்றங்கள், சனசமூக நிலையங்கள், நூல் நிலையங்கள் என்றும், நகரங்கள், கிராமங்கள், குறிச்சிகள் என்றும் மிகப் பரந்த அளவில் பாரதி நினைவு கூரப் படுகின்றான். உள்ளூராட்சித் திணைக்கள ஆதரவிலும் பாரதிக்கு விழா எடுக்கப்படுகிறது.

பாட்டுக்கொரு புலவன் பாரதியடா என்ற சாதனையை இன்னும் எவரும் முறியடிக்க முடியாத நிலையில், அவனது கவித்திறன் இன்னும் பல சந்ததிகளுக்கு முதன்மை பெற்று விளங்கும் என்பதில் சந்தேகமில்லை.

பாரதி பாடாத பொருள் இல்லை என்று கூறினாலும் அவனது விடுதலை வேட்கைப் பாடல்கள் எவருக்கும் உணர்வு ஊட்டும் சக்தி மிக்கவை. ஈழத்தமிழர்கள் விடுதலைக்காகப் போராடிக் கொண்டிருக்கும் இவ்வேளையில், பாரதியின் பாடல்கள் வருடத்தில் ஒரு நாளில் அன்றி ஆண்டு முழுவதிலும் பாடிப் பரப்பப்பட வேண்டியவை.

பாரதிக்கு மட்டுமன்றி வள்ளுவனுக்கும் இன்று விழா எடுக்கப்படுகிறது. வள்ளுவன் தன்னை உலகினுக்கே தந்து வான் புகழ் கொண்ட தமிழ் நாடு என்று பாரதி வள்ளுவனை ஏற்றிப் போற்றினான்.

யாம் அறிந்த புலவரிலே கம்பனைப் போல், வள்ளுவர் போல், இளங்கோவைப் போல் பூமிதனில் யாங்கணுமே பிறந்ததில்லை என்று பாரதி வரிசைப் படுத்திய பெருமைக்குரிய கம்பனுக்கும் சில வாரங்களுக்கு முன்னர் விழா எடுக்கப்பட்டது.

தமிழ்ப் புலவர்களுக்கும், கவிஞர்களுக்கும் விழா எடுத்து அவர்கள் அளித்த அருந்தமிழ்ப் பொக்கிஷங்களை ஆய்ந்து, சுவைத்து, உய்த்து அனுபவிப்பது தமிழர்களின் கடமையாகும். தமிழுக்கு அணிசேர்த்த, வளம் பெருக்கிய, அதற்குப் பெருமை கூட்டிய புலவர்களையும், வித்தகர்களையும், அறிஞர்களையும் கவிஞர்களையும் எங்கள் எதிர்கால சந்ததியினருக்கு அறிமுகம் செய்து வைக்க வேண்டியது தவிர்க்க முடியாத பொறுப்பாகும்.

ஓர் இனத்தின் விழிப்பாக விளங்குவது மொழி. அந்த மொழியின் செழிப்பையும், கலையையும் அதன் இலக்கியங்களையும் பேணிப் பாதுகாப்பதற்கு நம் முன்னோர் அளித்த அருஞ்செல்வங்களை அடுத்த சந்ததிக்குக் குறைவிலா நிறைவாகக் கையளிக்க வேண்டும்.

அந்த வகையில் கம்பன், வள்ளுவன், இளங்கோ, ஔவை, பாரதி போன்ற புகழ் புலவர்களின் இலக்கியங்கள் இளம் சந்ததியினருக்குப் புகட்டப்படுதல் அவசியம்.

ஆனால் இன்றைய பாடவிதானங்களில் அந்த இலக்கை அடைவதற்கு ஒரு சதவீதமேனும் உதவுவதாக இல்லை. இது பெரிதும் கவலைக்குரிய விடயமாகும். ஆனால் வெறும் கவலை தெரிவிப்பதோடு நிற்கக் கூடிய விடயம் அல்ல இது.

கம்பன் கழகங்கள், வள்ளுவர் மன்றங்கள், பாரதி அறிவகங்கள் என்று இயங்குபவை முறையே இராமாயணத்தையும், திருக்குறளையும், பாரதி பாடல்களையும் மற்றும் ஔவையின் அறநூல்களையும் மாணவர்களுக்குக் கற்பிப்பது குறித்துச் சிந்திக்க வேண்டும்.

வருடத்தில் ஒரு நாள் அல்லது ஒரு வாரவிழா எடுத்து அந்தப் பெரும் புலவர்கள் தந்த தமிழ்ப் பொக்கிஷங்களை மாணவர்கள் மனதில் பதித்து விட முடியாது. விடுமுறை காலக் கல்வி வார இறுதி வகுப்புகளை இலவசமாக வைத்து தமிழ் வளர்க்கலாம்.

பாரதி, வள்ளுவர் விழாக்கள் பெரிய அளவில் கொண்டாடப்படும் இன்றைய நாளில் சிந்தனை இதுவாகட்டும். சிந்திப்பதோடு நிற்காமல் அது செயலாக மலரட்டும். தமிழ் வளரட்டும்.

# ஜனாதிபதி டி. பியின் அரசியல் வாழ்வு சரிந்தது!

# சந்திரிகாவை நிலைப்படுத்த வாய்ப்பாகத் தேர்தல்!!

"ஜனாதிபதித் தேர்தலில் ஐ.தே. கட்சி வேட்பாளராக நானே போட்டியிடுவேன்" என்று பொதுத் தேர்தல் பிரசாரக் கூட்டங்களில் மார்பு தட்டிப் பேசிவந்தவர் ஜனாதிபதி டி.பி. விஜேதுங்க. ஆனால் இன்று......? ஐக்கிய தேசியக் கட்சித் தலைவர் பதவியை ராஜினாமாச் செய்துவிட்டு, காமினி திஸநாயக்காவே ஐக்கிய தேசியக் கட்சியின் ஜனாதிபதி வேட்பாளர் என்று அறிவித்து, வெறுங் கையோடு தலை குனிந்து நிற்கிறார்!

எதிர்வரும் சுமார் மூன்று மாதங்களுக்கு டி.பியார் மகுடத்தையும், வாளையும் கீழே போட்டுவிட்டு, சிம்மாசனத்தில் இருந்து சந்திரிகாவின் கைப்பொம்மையாகப் பணிபுரியப் போகிறார். சந்திரிகா கொடுக்கும் பத்திரங்களில் கையொப்பம் போட்டு சம்பளத்தை வாங்கிக் கொண்டிருக்கப் போகிறார். ஐக்கிய தேசியக்கட்சி எம்.பி ஒருவரின் சொற்களில் பிரதமரின் "பியோனாக" இருந்து பணிபுரியப் போகிறார்.

அதனை இன்னொரு விதமாகக் கூறுவதானால், ஜே.ஆர். உருவாக்கிய நிறைவேற்று ஜனாதிபதி என்ற அதிகாரம் மிக்க பதவியை அதன் கடைசிக் கட்டத்தில் சோரம் போகச் செய்கிறார் டி.பி.!

திரு. விஜேதுங்காவின் பதவிக்காலம் இன்னும் இரண்டொரு வருடங்களுக்குத் தொடரக் கூடியதாக இருந்திருக்கும் பட்சத்தில் அவர் ஐக்கிய தேசியக் கட்சியின்

அரசியல்

தலைவர் பதவியில் இருந்து நீங்கியிருந்தால் எல்லோரும் அதனை வரவேற்றிருப்பார்கள்.

அவர் தேசிய நலன் கருதி, கட்சி சார்பற்ற நிலையில், நடுநிலைமை நின்று தமது அதிகாரங்களைப் பயன்படுத்தி அல்லது செலுத்திச் செயற்படுவார் என எதிர்பார்த்திருப்பர்.

ஆனால் இன்னும் மூன்று மாதங்களுக்கு மட்டும் சிம்மாசனத்தில் இருக்கப் போகும் அவர், கட்சியின் தலைமையில் இருந்து விலகுவது என்பது முற்று முழுதாக அரசியல் இயலாத் தன்மையே; பலவீனமே!

பொதுத் தேர்தலில் ஐக்கிய தேசியக் கட்சி தோல்வி கண்டதுடனேயே விஜேதுங்கா தமது பதவியை ராஜினாமாச் செய்திருந்தால், அல்லது ஐக்கிய தேசியக் கட்சித் தலைவர் பதவியை ராஜினாமாச் செய்திருந்தால் டி.பியார் அரசியல் கனவான் தனமும், நேர்மையும் உள்ளவராகக் மதிப்பிடப்பட்டிருப்பார்.

### டி. பி.யின் அரசியல் சூதாட்டம்

முறையின் படி, ஜனாதிபதித் தேர்தல் முன்னுக்கும், நாடாளுமன்றத் தேர்தல் அதன் பின்னரும் நடந்திருக்க வேண்டும். தென் மாகாண சபைத் தேர்தல் சிங்கள மக்களின் அரசியல் நாடியை



சரியாகப் படம் பிடித்துக் காட்டியது. அதனைக் கண்டு பயந்த விஜேதுங்கா அரசியல் சூதாட்டம் ஒன்றில் துணிந்து இறங்கினார்!

முதலில் நாடாளுமன்றத் தேர்தலை நடத்தி, எப்படியும் ஐ.தே. கட்சியை வெற்றி

பிரேமதாசாவின் மரணத்துக்குப் பின்னர் விஜேதுங்காவை கட்சியின் தலைமைப் பதவிக்கு கொண்டு வருவதற்கு முன்னின்று உழைத்தவர் ரணில். விஜேதுங்காவை அடுத்துத் தாம் அந்தப் பதவிக்கு வரவேண்டும் என்ற ஆசை ரணிலுக்கு இருக்கவில்லை என்று கூறமுடியாது.

ஆனால் குறுக்கு வழிகளில் நடப்பதிலும், குத்துவெட்டுகள் செய்வதிலும் கபடங்கள் புரிவதிலும் வல்லவர் என்று பெயர் பெற்றவரான காமினி, வலதான விஜேதுங்காவை தமது வசமாக்கிக் கொண்டு வேண்டியதை, நினைத்ததைப் பெற்றுவிட்டார்; இனிமேல் அதனை ஸ்திரப்படுத்திக் கொண்டு ஆட்சி அதிகாரத்தைக் கைப்பற்றுவதே அவரது சிந்தனையாக இருக்கும்,

### சந்திரிகாவின் திறமை

விஜேதுங்காவைப் பொறுத்தவரை தலைமைப் பதவியும் அதிகாரமும் எவ்வித கஷ்டமோ முயற்சியோ இல்லாமல் வந்து கிடைத்தவை. அவை தந்த சுகபோகங்களையும் 'வருமானங்'களையும் அவர் கடந்த 18 மாதங்களாக நிறைய அனுபவித்து விட்டார். ஐ.தே.க. தலைவர் பதவியிலிருந்து நீங்கிவிட்டதால் அடுத்து வரும் மூன்று மாதங்களுக்கும் எவ்வித மனக் கஷ்டமும் இன்றிப் பதவியை

## "கிரிசாம்பாள்" ரணில் ஐ.தே.கவை உடைப்பாரா?

கொண்டு வைப்பது அது தவறின் அரசியல் அரங்கத்தில் இருந்து தாம் விலகிக் கொண்டு, கண்டியச் சிங்களவரான காமினி திசநாயக்காவிடம் ஐக்கிய தேசியக் கட்சியின் தலைமைத்துவத்தை ஒப்படைப்பது என்பதே அவரது உள்ளார்ந்த திட்டமாக இருந்தது. இது குறித்து இப் பத்திரிகை ஏற்கனவே குறிப்பிட்டிருந்தோம். அந்தத் திட்டத்தை விஜேதுங்கா தப்பவிடாமல் கனகச்சிதமாக நிறைவேற்றி விட்டார். அந்த வகையில் அவரது கெட்டித்தனம் பாராட்டப்பட வேண்டியது தான்!

ஐக்கிய தேசியக் கட்சியிலிருந்து ஏற்கனவே விலகிச் சென்ற காமினி திசநாயக்காவை மீண்டும் உள்ளே கொண்டு வந்து 'செருகு'வதற்காக, சிறிசேன கூரே போன்றவர்களை ஓரங்கட்டியும், ரணிலை 'தட்டிக் கொடுத்து' பின்னுக்குத் தள்ளியும் தமது திட்டத்தை நிறைவேற்றி இருக்கிறார்! அதனால் ஐக்கிய தேசியக் கட்சி எத்தனை துண்டுகளாக உடையும் என்பதனை நாளுக்கு நாள் எண்ண வேண்டிய நிலை உருவாகும்.

அனுபவிக்கலாம், சந்திரிகா பதவியேற்ற இரண்டு நாட்களிலேயே விஜேதுங்காவின் அதிகாரத்தைத் தம்வசமாக்கிக் கொண்டுவிட்டார். அவசரகாலச் சட்டத்தை நீக்க வேண்டும் என்று சந்திரிகா போட்ட அழுத்தத்தை டி.பியால் எதிர்கொள்ள முடியாமற் போனமை அதற்கு நல்ல உதாரணமாகும். அதன் பின்னர் அனேகமாக எல்லா விடயங்களிலும் கோயில் மாடு மாதிரி அந்தப் பக்கமும் இந்தப் பக்கமும் தலையாட்டப் பழகிக் கொண்டவர் டி.பி!

ஆசையால் வந்தார், இருந்தார், போனார் என்ற நிலையில் விஜேதுங்காவின் அரசியல் வாழ்வும், உயர்ச்சியும் சரிந்து விட்டன.

### நிலைப்பாடு மாற்றம்

அரசமைப்பு பிரகாரம் எதிர்வரும் நவம்பர் மாதம் 20ஆம் திகதிக்கு முன்னர் ஜனாதிபதித் தேர்தல் நடைபெற வேண்டும். சுதந்திரக் கட்சி பொதுத் தேர்தலின் போதும் அதற்கு முன்னரும் கொண்டிருந்த நிலைப்பாட்டை முற்றாக மாற்றி விட்டதால் ஜனாதிபதித் தேர்தல் நடக்கப் போகிறது. அதனைத் தொடர்ந்து ஒரு பொதுத் தேர்தலையும் நடத்த பொது மக்கள் ஐக்கிய முன்னணிப் பிரமுகர்கள் எண்ணம் கொண்டுள்ளனர்!

ஓகஸ்ட் பொதுத் தேர்தலில் பொதுமக்கள் ஐக்கிய முன்னணி வெற்றி பெற்ற போதிலும், போதிய பலம் இல்லை. அதனால் நிறைவேற்று ஜனாதிபதி முறையை தேர்தல் நடத்தாமலே மாற்றலாம் என்ற காமினியின் யோசனையை அரசாங்கம் நிராகரித்து விட்டது.

நிறைவேற்று ஜனாதிபதி முறையை ஒழிப்பது மட்டுமன்றி அரசமைப்பையே முற்றாக மாற்ற வேண்டியுள்ளதால், ஜனாதிபதித் தேர்தலை அதற்கான சர்வஜன வாக்கெடுப்பாகக் கொள்ளப் போவதாக நீதி அமைச்சர் பேராசிரியர் ஜி.எல். பீரிஸ் தெரிவித்திருக்கிறார். காரணம் எதுவாக இருந்தாலும் நேரத்துக்கு ஏற்ப நிலைப்பாட்டை மாற்றுவதில் [illegible] பொது மக்கள் ஐக்கிய முன்னணியும் வெளிக்காட்டி விட்டது.

பொதுத் தேர்தலில் மக்கள் கொடுத்த ஆணைக்கு ஏற்ப, அரசியலமைப்புச் சபை ஒன்று [illegible] எடுத்த நீதி அமைச்சர், இப்போது தட்டை மாற்றிப் பாடுகிறார்!

### புதிய அரசும் சமஷ்டியும்

அரசமைப்புச் சட்டத்தை மாற்றுவதற்காக ஜனாதிபதித் தேர்தல் மூலம் மக்கள் கருத்தைக் கணிக்க விரும்பும் பொது மக்கள் ஐக்கிய முன்னணி— தமிழர்களின் அரசியல் அபிலாசைகளை நிறைவேற்றுவதற்கான ஆகக் குறைந்த தீர்வு என்று கருதப்படும் சமஷ்டி முறையை அரசமைப்புத் திருத்தத்தில் முன்வைக்குமா என்று கேட்க விரும்புகிறோம்.

இப்போதுள்ள நிலையில்— தனது ஆட்சிப் பலத்தை— நிலைநிறுத்த வேண்டிய தேவை இருக்கும் போது— அரசாங்கம் இத்தகைய ஒரு பரீட்சையை நடத்திச் சோதனைக்குள் இறங்க விரும்ப மாட்டாது என்பது சொல்லாமலே புரியக் கூடியதே.



நடக்கவிருக்கும் ஜனாதிபதித் தேர்தலில் சந்திரிகா குமாரதுங்காவும், காமினி திசநாயக்காவும் மோதவிருக்கின்றனர். சிங்களப் பகுதிகளில் தனக்குள்ள ஆதரவோடு, வடக்கு - கிழக்கு

**உதயகாந்தன்**

## பிரதமரின் தீர்வுத் திட்டத்தில் தமிழ்க்கட்சிகளுக்கு திருப்தி?

வாழ் தமிழ் முஸ்லிம் மக்களின் ஆதரவையும் பெறுவதற்கு சந்திரிகா திட்டமிட்டுள்ளார். அதற்கு ஏற்ப முறைகளை இப்போதே மெதுமெதுவாகச் செய்து வருகிறார்.

### தமிழ்க் கட்சிகளுடன் சந்திப்பு

கடந்த திங்கட்கிழமை இரவு நாடாளுமன்றத்தில் அங்கம் வகிக்கும் தமிழ்க் கட்சிகளை அழைத்து இனப்பிரச்சினையைத் தீர்ப்பதற்குத் தாம் வைத்திருக்கும் திட்டத்தை சந்திரிகா மேலோட்டமாகத் தெரிவித்தார் என்று கொழும்புத் தகவல்கள் தெரிவிக்கின்றன. இச்சந்திப்பு இரண்டு மணித்தியாலங்கள் இடம் பெற்றதாகவும், கூட்டத்தில் கலந்து கொண்ட தமிழ்க் கட்சிகள் திருப்தி தெரிவித்திருப்பதாகவும் சொல்லப்படுகிறது.

வடக்கின் பெரும் பிரதேசம் விடுதலைப் புலிகள் வசம் இருப்பதால், அவர்களின் ஆதரவைப் பெற்று இங்கு ஜனாதிபதித் தேர்தலை நடத்தக்கூடிய சூழலை ஏற்படுத்துவதற்கான முயற்சிகளையும் சந்திரிகா மேற்கொள்வார் என்று எதிர்பார்க்கலாம்.

தமிழர்களைப் பொறுத்தவரையில் காமினியை ஆதரிக்க எவரும் விரும்பமாட்டார்கள். அந்த வகையில் சந்திரிகாவுக்கே தமிழர்களின் ஆதரவு பெருமளவில் இருக்கும். வடக்கு-கிழக்கில் மட்டுமன்றி, மலையகத்திலும் தமிழர்களின் ஆதரவு சந்திரிகாவுக்கே கிடைக்க வாய்ப்பு உண்டு; இ.தொ.கா. அரசாங்கத்தை ஆதரிக்கும் என்று தொண்டமான் நாடாளுமன்றில் வைத்து அறிவித்திருப்பது இங்கே குறிப்பிடத்தக்கது.

### கிரிசாம்பாள் ரணில்

மேலும் ஐக்கிய தேசியக் கட்சி இப்போதுள்ள நிலையில் அங்கு பல அதிருப்திக் குழுக்கள் தோன்றி கட்சி பலவீனம் அடைவதற்கான அறிகுறிகளே அதிகம் உள்ளன. பல விடயங்களிலும் கனவான் தனமாக நடந்து கொள்ளும் ரணில் விக்கிரமசிங்கா நினைத்தால் ஐ.தே. கட்சியை உடைத்து விடலாம்; (பிரேமதாசா ஆதரவாளர்கள் காமினியை ஆதரிக்க மாட்டார்கள்.) ஆனால் ரணிலிடம் அந்தப் போக்கு இருப்பதாகத் தெரியவில்லை. ஆமைத்தின் பொறுமையாக நின்று, கடைசியாக நின்று, மோதம் வாங்கித் தங்க மோதிரம் பெற்ற கிரிசாம்பாள் போக்கைக் கடைப்பிடிக்கவே ரணில் விரும்புகிறார்!

எதற்கும் ஸ்ரீலங்கா அரசியலில் புதிய சந்ததித் தலைவர்களில் சந்திரிகா ஒரு சிறப்பான முத்திரையைக் குத்துவார் என்று எதிர்பார்க்கலாம். எனினும் அவரது செயற்பாடுகள் துலங்க இன்னும் ஆறு மாதம் செல்லும். சுதந்திர வர்த்தக வலய ஊழியர்களுக்கு அவர்களின் குறைபாடுகளைத் தீர்ப்பதற்கு ஆறு மாத காலம் தமக்கு அவகாசம் தருமாறு சந்திரிகா கேட்டதன் அர்த்தம் அதுவே! ஜனாதிபதித் தேர்தல், அதன் பின் பொதுத் தேர்தல் என்று கணக்குப் பார்த்தால் சந்திரிகா தம்மை நிலைப்படுத்திக் கொள்ள ஆறு மாதங்கள் தேவைப்படுகின்றன. அவர் தம்மை அரசியலில் நிரந்தரமாக நிலைப்படுத்திக் கொள்ள ஜனாதிபதித் தேர்தல் ஒரு அரிய வாய்ப்பாகும். ★

உதயன் ஞாயிறு சிறப்பகம்

---

## பிரதம விருந்தினரின்..

(3ஆம் பக்கத் தொடர்ச்சி)

விளையாடு''

''Win or lose play the - Game''

இக்கீதங்கள் யாவும் விளையாட்டால் மாணவர் மத்தியில் உருவாக வேண்டிய மனப்பாங்கு, பண்பு ஆகியவற்றைச் சுட்டிக் காட்டுகின்றன. மேற்கூறிய வாக்கியங்கள் உணர்வு பூர்வமானவை, உயிரானவை. விளையாட்டு வேளைகளில் பாட்டுப் பாடும் போதும், ரசிக்கப்படும் போதும் மாணவர் மனதில் நல்ல அழுத்தத்தை ஏற்படுத்தக் கூடியவை.

இக் கீதங்களில் கூறப்பட்ட பண்பை ஒரு மாணவன் அனுபவரீதியாகப் பெற பெரு விளையாட்டுக்கள் அவசியம்.

மெய்வல்லுநர் நிகழ்ச்சிகளும் பெரு விளையாட்டுகளும் நம் கலாசாரத்தோடும் இணைந்தவை. நமது ஊர் விளையாட்டுகள் பல தேசிய கலாசாரத்தைப் பிரதிபலிக்கின்றன. உதாரணமாக கிளித்தட்டு எல்லா கிராமங்களிலும் விளையாடப்படுகிறது. நெல் வயலில் நெல் விதையைப் பொறுக்க வரும் கிளிகளை கமக்காரன் வரம்புகளில் ஓடி கலைக்கும் செயற்பாட்டைப் பாவனையாகக் கொண்டது; விவசாய மக்களின் செயற்பாட்டை அடிப்படையாகக் கொண்டது.

இதே போன்று ''கொடி எடுத்தல்'' ''வார் ஓட்டம்'' கிட்டிப் போன்ற பல விளையாட்டுக்கள் உண்டு. இவற்றைப் பிரபல்யப்படுத்த வேண்டும். அதற்கு சில இடர்கள் உண்டு. இவ் விளையாட்டுகள் இடத்திற்கிடம் வேறுபடுகின்றன. அவற்றின் விதிகளும் வித்தியாசப்படுகின்றன. சில விதிகள் நடைமுறைப் படுத்த முடியாதவையாகவும் உள்ளன. இவ் விளையாட்டுகளுக்கு புதிய விதிகளை உருவாக்கி ''நேர்மை'' ''தூய்மை'' ''உண்மை'' ஆகியவற்றோடு விளையாட வழிகள் வகுக்கவேண்டும்; அப்போது தான் நம் தேசிய பண்பும் வளரும் பெரு விளையாட்டுகளும் வாழும்.

க. கந்தசாமி
கல்விப் பணிப்பாளர்
யாழ். வலயம் II

## விளையாட்டுத்துறை..

(3ஆம் பக்கத் தொடர்ச்சி)

உயர்ந்த சிந்தனை அடக்கமான—நேர்மையான பேச்சு— சுயநலமற்ற யாழ்க்கை முறை போன்றவை எமது இளம் சமுதாயத்தினருக்கு முன் மாதிரியான வழிகாட்டுதல்களாகும்.

காலநிதி எதிர்வீரசிங்கத்தின் அனுபவம் மிக்க ஆலோசனைகளை கருத்தில் கொண்டு எமது சங்கம் துரிதமாக வளர்ந்து வருவதை எண்ணி நாம் அவரை நன்றியுடன் நினைவு கூருகிறோம்.

எமது சங்கம் ஸ்தாபிக்கப்பட்டு பத்து மாத காலத்துக்குள் அது பூரணத்துவம் மிக்க ஒன்றாகவிருந்தி அடைந்திருக்கின்றது என்றால்—

இந்தக் காலகட்டத்துக்குள் மாவட்ட ரீதியாக மெய்வல்லுநர் போட்டிகளை ஆரம்பிக்கக் கூடிய வலுவைப் பெற்றுள்ளது [illegible] சங்க செயற்[illegible] தமது நேரத்தையும், வளங்களையும் பின்நிற்காது செலவிடும் சங்க ஆட்சிக் குழு உறுப்பினர்களின் இடைவிடாத முயற்சியே அதற்குக் காரணமாகும். அவர்கள் அனைவரையும் உளமாறப் பாராட்டுகிறேன்.

இந்தப் போட்டி சிறப்புற நடைபெற சகல வழிகளிலும் ஒத்துழைப்பு நல்கிய அனைவருக்கும் எமது மனமார்ந்த நன்றிகள்.

விளையாட்டுத்துறையில் ஈடுபாடுள்ள அனைவரும் மற்றும் நலன் விரும்பிகளும் எமது சங்க வளர்ச்சிக்கும் அதன் செயற்பாட்டிற்கும் தொடர்ந்து ஒத்தாசை புரிய வேண்டும் என விநயமாக உடன் கேட்டுக் கொள்கிறேன்.

டாக்டர் [illegible]
யா.மா.ஆ.மெ.சங்கம்

## சங்கத்தின் பணி..

சங்கத்தின்..........

[3ஆம் பக்கத் தொடர்ச்சி]

குந்தது.

ஜே. எஸ். ஏ. அன்றைய சூழ்நிலைக்கு ஏற்ப சகல துறை விளையாட்டுக்களையும் மெய்வன்மை நிகழ்வுகளையும் உள்ளடக்கிய செயற்பாட்டைக் கொண்டிருந்தது.

ஜே ஏ ஏ ஏ Jaffna Amateur Athletic Association) மெய்வன்மை என்ற எல்லைக்கோட்டுக்குள் தன் பரப்பைக் கட்டுப் படுத்திச் செயற்பட்டது ஆனால், கடந்த பதினைந்து ஆண்டுகளாக ஜே ஏ. ஏ. ஏ. யின் செயற்பாடுகள் மைதானத்தை விட்டு கடிதத்தலைப்புகளுடன் அடங்கிவிட்டது.

மாவட்டத்தின் மெய்வன்மைத் தரம் பாதிக்கப்பட்டது. உலக மற்றும் தேசிய மெய்வன்மைத் தரத்தை எட்டுவதற்கான வாய்ப்புகள் அடைக்கப்பட்டது.

இந்த நிலையில் இத்துறை ஈடுபாடு கொண்டவர்கள் ஏதாவது செய்தாக வேண்டும் என்ற நிலைக்குத் தள்ளப்பட்டார்கள்.

30-10-93 அன்று யாழ்ப்பாணப் பல்கலைக்கழக விளையாட்டுத் துறைப்பணிப்பாளர் திரு. சி. தியாகராசா தலைமையில் இத்தொய்வு நிலையை ஆய்வதற்கும் மறுசீரமைப்பு செய்வதற்குமான ஓர் ஆலோசனைக் கூட்டம் நடைபெற்றது. இக் கூட்டத்தில் மாவட்டத்தின் பல விளையாட்டுக் கழகப் பிரதிநிதிகள் கலந்துகொண்டனர். சம்பிரதாயமற்ற இச் சந்திப்பு ஓர் அமைப்புத் தோற்றுவதற்கு கால்கோள் இட்டது; இதன் அறுவடையே யாழ். மாவட்ட அமெச்சூர் மெய்வல்லுநர் சங்கமாக இன்று பரிணமித்துள்ளது.

சர்வதேச அமெச்சூர் மெய்வன்மை ஒன்றியத்தின் (I. A. A. F.) நடைமுறைகளுக்கு ஏற்ப யாழ். மாவட்ட அமெச்சூர் மெய்வல்லுநர் சங்கம் செயற்படுகின்றது. தோற்றம்பெற்ற ஆறுமாதங்களுக்குள் சங்கம் தன் பணிகளைப் பல்துறைகளில் விரிவுபடுத்தியுள்ளது.

பாடசாலை ஆசிரியர்களுக்கும் விளையாட்டுக்கழக உறுப்பினர்களுக்கும் மெய்வன்மை விதிகள் தொடர்பாக தொடர்ச்சியான வகுப்புக்களை நடத்தியுள்ளோம். இவ்வகுப்புக்களில் கலந்து கொண்டவர்களுக்கு எழுத்து மூல பரீட்சைகள் நடத்தப்பட்டுள்ளன. பாசறைப் பயிற்சி முகாம்கள் நடத்தப்

(6ஆம் பக்கம் பார்க்க)

## வீரசாதனை.........

(3ஆம் பக்கத் தொடர்ச்சி)

மேலும் செழிப்புடன் வளர்க்கப்பட்டு எம் தேசத்திற்கு பெருமை தேடித்தர வேண்டும்.

இன்று எத்தனையோ நெருக்கடிகள், பிரச்சினைகள் மத்தியில் எமது இளம் பரம்பரையினரின் விளையாட்டுத் திறமைகளையும், ஆற்றல்களையும் வெளியே கொணர்ந்து, மெய்வல்லுநர் போட்டிகளில் அவர்களின் ஆர்வத்தையும், ஊக்கத்தையும் ஏற்படுத்தும் நோக்குடன் நடத்தப்படுகின்ற இப்போட்டியானது மிகவும் ஆக்கபூர்வமானதாகும். இந்தப்பணி வெற்றிகரமாக முன்னெடுக்கப்பட எனது நல்வாழ்த்துக்களைத் தெரிவித்துக்கொள்கிறேன். ★

## ஆரோக்கியம்..

(8ஆம் பக்கத் தொடர்ச்சி)

நிலையைப் பெறுவதற்கு பிராணவாயுவை பயன்படுத்தக்கூடிய முறையில் பாவிப்பது.

★ சோர்வில் இருந்து தசைகளை மீட்டெடுக்கும் வீதத்தை விருத்தி செய்வது இது கடுமையாக, நீண்ட காலத்துக்கு உழைக்கவும் நன்றாகப் படிக்கவும் எமக்கு உதவும்.

★ எம்மை, அவசர தேவைகளுக்கு நாம் தயார் செய்வதற்காக எமது தசைகளின் பலத்தை, வேகத்தை மற்றும் ஒருங்கிணைப்பை விருத்தி செய்வது

★ நோய்கள் தாக்காத தடுப்புத் தன்மையை விருத்தி செய்வது; நோயிலிருந்து விரைவாக சுகமடைவது.

★ எமது படிப்பின் தரத்தையும் வாழ்க்கைத் தரத்தையும் விருத்தி செய்வது.

சமூக வாழ்க்கை மற்றும் கற்பதற்கு ஆகியவற்றுக்குத் தேவையான முழு உணவுர்

(6ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பிரதமர் சந்திரிகா...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

மின் விநியோகம் வழங்கப் படும்.

யாழ்நகரம், பெரியாஸ்பத் திரி ஆகியவற்றிற்கு ஜெய ரேட்டர் வசதியை விஸ்தரிப் போம்.

மின் விநியோகத்தை சீர் செய்வதற்கு விடுதலைப் புலி களின் ஒத்துழைப்பை பிரதமர் கோருவார். சாதகமான பதிலை இதற்கு பிரபாகரன் அனுப்புவார் என்று அரசு எதிர்பார்க்கிறது.

கேள்வி: மின்சாரக் கட்ட ணத்தை அரசு எவ்வாறு அற விடும்?

ரத்னத்த: அது போதைக்கு அது ஒரு சேவையாக இருக் கட்டும்.

கேள்வி: விடுதலைப் புலி கள் பிரதிநிதி ஒருவரை கொழும்புக்கு அனுப்ப வேண் டும் என்று கேட்கிறீர்களா?

ரத்வத்த: பதில் கடிதத்தில் அது பற்றி எதுவும் நாம் கூற வில்லை. அவர்கள் பிரதிநிதி ஒருவரின் பெயரை அறிவித்த வுடன் அப்படியான விஷயங் களை முடிவு செய்யலாம்.

கேள்வி: பிரதிநிதி ஒருவரை நியமிக்கும்படி ஏன் நீங்கள் விடுதலைப் புலிகளை கேட் கிறீர்கள்?

ரத்வத்த: காரணம், நாம் யாருடன் பேச்சுக்கள் நடத்த வேண்டும் என்பது எமக்கு தெரியாதுள்ளது.

கேள்வி: யார் உங்களின் (அரசின்) தூதர்?

ரத்வத்த: நாம் யாரையும் நியமிக்கவில்லை அந்தக் கட் டத்தை நாம் இன்னும் அடையவில்லை. விடுதலைப் புலிகளின் பதிலைப்பொறுத்து அரச தரப்பில் கலந்து கொள் ளும் பிரதிநிதி யார் என்பது தீர்மானிக்கப்படும்.

இது விஷயங்களை பிரத மரே சொந்தமாகக் கவனித் துக் கொள்கிறார். இதற்கான அதிகாரத்தை அமைச்சரவை பிரதமருக்கு வழங்கி உள்ளது. (இ-எ)

---

பிற்போடப்பட்டுள்ளது

எஸ். எம். பெர்னாண்டோ நிறுவன ஆதரவில் யாழ் றோட்டறக்ற் கழகத்தினால் இன்று (11-09-94) நடை பெறவிருந்த சைக்கிளோட்டப் போட்டி தவிர்க்க முடி யாத காரணங்களினால் 18-09-94 இற்குப் பிற் போடப்பட்டுள்ளது என்பதனை மிகவும் வருத்தத்துடன் அறியத்தருகின்றோம்.

பி.கு அனேகரின் வேண்டுகோளிற்கிணங்க விண்ணப் பக் கட்டணம் ரூபா 25 ஆக குறைக்கப்பட்டுள் ளது என்பதனை மகிழ்ச்சியுடன் அறியத்தருகி றோம்.

யாழ். றோட்டறக்ற் கழகத்தினர்

(இ-9098)

ராகமாலிகா ஆடையகம்

என ஆரம்பித்து

தரமான புடவை வகைகளை நியாயமான விலையில் வழங்கி வாடிக்கையாளரின் நன்மதிப்பை பெற்ற ஸ்தாபனம்

தற்பொழுது அதே இடத்தில்

கோபிராஜ் ஆடையகம்

என பெயர்மாற்றத்துடன் தொடர்ந்தும் தன் சேவையை தொடர்கிறது என்பதை அன்பர்கள் ஆதர வாளர்கள், நண்பர்கள் அனைவருக்கும் தெரிவித்துக் கொள்கின்றோம்.

இறக்குமதி செய்யப்பட்ட ஆடைத் தினுசுகள் மற்றும் மங்கள வைபவங்களுக்கான பட்டுப்புடைவைகள் என்பவற்றை மன நிறைவுடன் தெரிவு செய்ய நீங்கள் நாடவேண்டியது!

கோபிராஜ் ஆடையகம்

04, சிறப்பு அங்காடி யாழ்ப்பாணம் (32698)

மிட் - ரவுண் கிண்ணத்துக்கான

ஆறு பேர் ஐந்து ஓவர்கள் கொண்ட

கிரிக்கெட் சுற்றுப் போட்டி

யாழ். மிட் - ரவுண் றோட்றறக்ற் கழகம்



எஸ்-எம்-பெர்ணன்டோ

ஆதரவில்

யாழ் இந்துக் கல்லூரி மைதானத்தில் நடத்துகின் றது. இன்று காலை கால்இறுதி ஆட்டங்களும், மதியத்திற்கு பின் அரையிறுதி ஆட்டங்கள், 3 ஆம் இட ஆட்டம், இறுதி ஆட்டம் என்பவையும் நடைபெறும்.

அனைத்து ஆர்வலர்களையும் அன்புடன் அழைக்கின்றோம்

செயல்திட்ட இயக்குநர்

(இ-9090)

## பல்கலைக்...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

மணி, சித்த மருத்துவ சத்திர சிகிச்சை மாணி ஆகிய பட் டங்களும் வழங்கப்பட்டன.

ஒவ்வொரு அமர்வின் முடி விலும் பரீட்சையில் திற மையை வெளிக்காட்டியோ ருக்கு பரிசில்களும் புலமைப் பரிசில்களும் வழங்கப்பட்டன.

### முன்னாள் துணைவேந்தருக்கு

முதலாவது அமர்வின்போது யாழ் பல்கலைக்கழக முன் னாள் துணைவேந்தர் காலஞ் சென்ற அ. துரைராசாவுக்கு விஞ்ஞான கலாநிதி எனும் கௌரவப்பட்டம் தேகாந்த நிலையில் வழங்கப்பட்டது.

அத்துடன் காலஞ்சென்ற துரைராசாவின் நினைவாக கலைப்பீடத்திலிருந்து ஒரு மாணவனுக்கும் விஞ்ஞான பீடத்தில் இருந்து ஒரு மாண வனுக்கும் தங்கப்பதக்கங்கள் வழங்கப்பட்டன.

திரு. கார்த்திகேசு குகபால னுக்கு கலாநிதிப் பட்டம் வழங்கப்பட்டது.

நேற்றைய வைபவத்தில் 161 பேருக்கு கலை மாணிப் பட்ட மும்,

35 பேருக்கு தொழில் நிர் வாக மாணிப்பட்டமும்

75 பேருக்கு வர்த்தகமாணிப் பட்டமும்

58 பேருக்கு மருத்துவ சத் திர சிகிச்சை மாணிப் பட்ட மும்

25 பேருக்கு இலச்சினை மாணிப்பட்டமும்

9 பேருக்கு நாட்டிய கலை மாணிப்பட்டமும்,

2 பேருக்கு இசைக்கலை மாணிப்பட்டமும்,

149 பேருக்கு விஞ்ஞான மாணிப்பட்டமும்.

8 பேருக்கு சித்த மருத்துவ சத்திரசிகிச்சை மாணிப்பட்ட மும் வழங்கப்பட்டன.

நேற்றைய வைபவத்தில் பெரும் எண்ணிக்கையானோர் கலந்து கொண்டனர்.

கைலாசபதி கலையரங்குக்கு வெளியேயும் பெரும் எண்ணிக் கையானோர் குழுமி நின்று நிகழ்ச்சிகளை அவதானித்துக் கொண்டிருந்தனர். (இ-4)

---

## தீவிர...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

றும் சில வட்டாரங்கள் தெரி வித்தன.

கடந்த பொதுத் தேர்தலில் திரு. விஜேதுங்கா தீவிர பிர சாரத்தை மேற்கொண்டதால் அவர் உடல் நலம் குன்றியி ருப்பதாக ஐ.தே.க. பொதுச் செயலாளர் காமினி விஜே சேகரா தெரிவித்தார். (இ-எ)

---

## ஆரோக்கியம்......

(5 ஆம் பக்கத் தொடர்ச்சி)

மற்றும் கூட்டுறவு அணுகு முறைகளைய விளையாட்டுத் துறையில் பங்கு கொள்வது எமக்குப் போதிக்கிறது. விளையாட்டுத் துறையிலான போட்டி எமக்கு, எம்மைப் பற்றி அறிந்து கொள்ளவும் வெற்றி மற்றும் தோல்வி பற்றிய எமது எதிர் நடவடிக் கையைத் தெரிந்து கொள்ள வும் போதிக்கிறது. போட்டி எமது உணர்வுகளை வெளிக் கொணர்கிறது. இதன் மூலம் ஏனையோரின் உதவியுடன் பொருத்தமான முறையில் இவற்றை எம்மால் கையாளக் கூடியதாகவுள்ளது.

ஆரம்பப் பாடசாலையில் கல்வி பயிலும் மாணவர்களில் 98 சதவீதமானோர் பல் கலைக்கழக அனுமதி பெறுவ தில்லை என்பது பெற்றோர், மாணவர், ஆசிரியர் மற்றும் நிர்வாகிகளுக்கு தெரியும். இப் பிரச்சினைக்கு நாம் தீர்வு காணும் வரை, மாணவர்கள் உடற்பயிற்சி மற்றும் விளை யாட்டின் பயனை அனுபவிக் கட்டும். இதற்கு மாணவர் தினமும் ஒரு மணித்தியாலத் தையே செலவிட வேண்டி யுள்ளது.

விழித்துக் கொண்டிருக்கும் போது மாணவர் ஏனைய நடவடிக்கைகளுக்குச் செல விடும் நேரத்தை நாம் கணக் கிட்டுப் பார்ப்போமானால் பல மணித்தியாலங்கள் விர யம் செய்யப்பட்டவையாக இருக்கும். விரயமாகும் அந்த நேரத்தின் ஒரு மணித் தியாலத்தை மாணவர் பயன் படுத்தினால் மேலே குறிப் பிட்ட நன்மைகளைப் பெற லாம்.

ஆரோக்கியம் நிறைந்த உறுதியான உடலில் உள்ள ஆரோக்கியமும் சுறுசுறுப்பும் கொண்ட மனமே மாணவர், பெற்றோர் மற்றும் சமூகத் தினரதும் அரும்பெரும் சொத்தாகும்.

தேர்வு உங்களுடையதே; நன்மையும் உங்களுடையதே. தயவு செய்து ஏனையோரைக் குற்றஞ்சாட்டாதீர்கள். ★

---

## விடுதலைப்...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

வித்துள்ளனர் — சமாதானப் பேச்சுக்களை படையினரும் ஆதரிக்கின்றனர்.

கேள்வி: படையினரை சமாதானப் பேச்சுகளில் சம் பந்தப்படுத்தப் போகிறீர் களா?

சிவிலியன் அரசிடம் இருந்து அவர்கள் உத்தரவு பெற வேண்டும் அல்லவா?

ரத்வத்த: சமாதானப் பேச்சுகள் அல்லது சமாதான நடைமுறைகளில் படையி னரை நாம் சம்பந்தப்படுத்த மாட்டோம். அவர்களுக்கு நடப்பதைத் தெரிவிப்போம்.

கேள்வி: அமைதிப் பேச்சு கள் ஆரம்பமாக எவ்வளவு காலம் பிடிக்கும்?

ரத்வத்த: தனது பிரதிநிதி ஒருவரை திரு. பிரபாகரன் நியமித்தவுடன் பூர்வாங்கப் பேச்சுகள் ஆரம்பிக்கும்.

கேள்வி: விடுதலைப் புலி களுடனான பேச்சுவார்த்தை யில் பிரதமர் நேரடியாகக் கலந்து கொள்வாரா?

ரத்வத்த: விடுதலைப் புலி களின் பதிலைப் பொறுத்துத் தீர்மானிக்க வேண்டிய விஷ யம் இது. (இ-எ)

---

## சங்கத்தின்...

(5 ஆம் பக்கத் தொடர்ச்சி)

பட்டுள்ளன.

இன்று கனிஷ்ட நிலைமெய் வன்மைப் போட்டி நடை பெறுகின்றது இப்போட்டி யில் மாவட்டத்தில் உள்ள பல விளையாட்டுக் கழகங் களும் சங்கங்களும் கலந்து கொள்கின்றன சுமார் 300 வீரர்களும், வீராங்கனை களும் தம் மெய்வன்மையைக் காட்டுகின்றனர்.

மிகக்குறுகிய காலத்தில் — ஆறு மாதங்களுள் — யாழ். மாவட்ட அமெச்சூர் மெய் வல்லுநர் சங்கம் 24 விளை யாட்டுக்கழகங்களைத் தன்ன கத்தே கொண்டு அரிய சாதனைகளை நிகழ்த்திக் காட்டியுள்ளது. சங்கத்தின் பணி மேன்மேலும் சிறக்க வாழ்த்துகின்றேன்.

கப்டன்

என். சோமசுந்தரம்

துணைத்தலைவர்,

யா. மா. ஆ. மெ. சங்கம்

---

## கண்காட்சி நீடிப்பு

யாழ்ப்பாணம், செப். 11

யாழ்ப்பாணம், ஆஸ்பத் திரி வீதி, சென். பீட்டர்ஸ் லேனில் அமைந்துள்ள வட இலங்கை தொழில் நுட்பக் கல்லூரியின் கணனி இலத்திர னியல், மனையியல் கண் காட்சி இன்று ஞாயிற்றுக் கிழமை வரை நீடிக்கப்பட்டுள் ளது. (இ)

---

## மினிபஸ்...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

★ அச்சுவேலி — 20 ரூபா வில் இருந்து 15 ரூபா.

★ புன்னாலைக்கட்டுவன் — 15ரூபாவிலிருந்து 10 ரூபா.

★ அளவெட்டி — 23 ரூபா வில் இருந்து 15 ரூபா.

★ தெல்லிப்பளை — 17 ரூபாவில் இருந்து 12 ரூபா.

★ சாவகச்சேரி — 20 ரூபா வில் இருந்து 15 ரூபா.

★ பளை — 40 ரூபாவில் இருந்து 33ரூபா.

★ மூளாய் — 22 ரூபா 50 சதத்தில் இருந்து 15 ரூபா.

★ தாளையடி — 70 ரூபா வில் இருந்து 50 ரூபா

★ கிளாலி — நூறு ரூபா வில் இருந்து 75 ரூபா

இவைதவிர சாவகச்சேரியில் இருந்து மருதனார்மடத்துக் கான கட்டணம் 30 ரூபாவில் இருந்து 20 ரூபாவாகவும் — பருத்தித்துறையில் இருந்து கொடிகாமத்துக்கான கட்ட ணம் 30 ரூபாவில் இருந்து 22 ரூபாவாகவும் —

பருத்தித்துறையில் இருந்து தாளையடிக்கான கட்டணம் 50 ரூபாவில் இருந்து 35 ரூபா வாகவும் குறைக்கப்பட்டுள் ளது. (ஐ)

---

## யாழ். மாவட்ட...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

ஆகிய இடங்களில் வாக்கா ளர்களுக்கு மதுபானமும், குளிர் பானங்களும் வழங்கப் பட்டன. வாக்காளர்கள் பய முறுத்தப்பட்டனர்.

ஆகவே இத்தேர்தல் செல்லு படியாகாது என்று நீதிமன் றம் அறிவிக்க வேண்டும். இவ் வாறு மனுவில் கூறப்பட்டுள் ளது.

இரண்டாவது ஆட்சேப மனுவை தேர்தலில் போட்டி யிட்ட சுயேட்சைக் குழு - 1 இன் வேட்பாளர்களான கே. பாஸ்கரன், ரி. குமாரன், எஸ். விநோதலிங்கம் ஆகி யோர் தாக்கல் செய்துள்ள னர்.

இம் மனுவில் கூறப்பட்டிருப் பதாவது:

யாழ். தேர்தல் மாவட்டத் தில் பதிவு செய்யப்பட்ட வாக் காளர்களின் எண்ணிக்கை 5 லட்சத்து 96 ஆயிரத்து 366 ஆகும்.

இவ் வாக்காளர் பட்டியல் 1986 இல் தயாரிக்கப்பட்ட தாகும். இவர்களில் கடந்த தேர்தலில் 13 ஆயிரத்து 881 வாக்காளர்களே வாக்களித் தனர். அவற்றில் 352 வாக்கு கள் நிராகரிக்கப்பட்டன.

வாக்காளர் அட்டைகளோ, வேட்பாளர் பட்டியலோ அங்கு இருக்கவில்லை.

ஆகவே அங்கு நடந்த தேர் தல் செல்லாது என்று நீதி மன்றம் அறிவிக்க வேண்டும் இவ்வாறு இம்மனுவில் தெரி விக்கப்பட்டுள்ளது

இரண்டாவது மனுவில் தேர் தல் ஆணையாளர், யாழ். மாவட்டத் தெரிவத்தாட்சி அதிகாரி லக்ஷ்மன் பெரேரா மற்றும் தேர்தலில் பல கட்சி கள் மற்றும் குழுக்கள் சார்பில் போட்டியிட்ட 49 வேட்பாளர்கள் பிரதிவாதிக ளாகக் காட்டப்பட்டுள்ளனர்

---

# பட்டமளிப்பு விழா கலை நிகழ்ச்சிகள்

யாழ்ப்பாணம், செப். 11

யாழ். பல்கலைக் கழகத்தின் 14 ஆவது பட்டமளிப்பு விழா வின் இரண்டாம் நாள் நிகழ் வாக இன்று ஞாயிற்றுக் கிழமை மாலை 3-30 மணிக்கு கைலாசபதி கலையரங்கில் இராமநாதன் நுண்கலைத் துறையின் கலை நிகழ்ச்சி இடம்பெறும். (இ-4)

---

## பிரேமதாஸா—

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

தார்.

சட்டமா அதிபர் அனுமதி அளிப்பின் வைத்திய அறிக் கையை பகிரங்கமாகத் தாம் வெளியிட முடியும் என்று நீதி வான் நீதிமன்றத்தில் சமூக மளித்திருந்த பத்திரிகையாளர் களுக்கும் பொதுமக்களுக்கும் அறிவித்தார்.

மேல் விசாரணை அடுத்த மாதம் 5 ஆம் திகதி வரை ஒத் திவைக்கப்பட்டது. (இ-எ)

---

## 'ஓசை' மலர் வெளியீடு

நல்லூர் விஞ்ஞானக் கல்வி நிலைய 1994 ஆம் ஆண்டின் ஜி. சி. ஈ. பருவ மாணவர்க ளின் 'ஓசை' மலர் வெளி யீட்டு விழா இன்று பிற்பகல் 3.30 மணியளவில் நாவலர் கலாசார மண்டபத்தில் இடம் பெறும்.

---

## சுவாமி ஹரிதாஸ் கிரி சமாதியடைந்தார்

சென்னை, செப். 11

சற்குரு ஸ்ரீ ஞானானந்தகிரி சுவாமிகளின் தலைசீடரான சுவாமி ஹரிதாஸ்கிரி கடந்த 4 ஆம் திகதி ஜலசமாதி அடைந்தார் என்று அறிவிக் கப்படுகிறது.

---

# மரண அறிவித்தல்கள்

### திருமதி கணபதிப்பிள்ளை அன்னப்பிள்ளை

குரும்பசிட்டியைப் பிறப்பிடமாகவும் திருநெல் வேலி கிழக்கை தற்போதைய வசிப்பிடமாகவும் கொண்ட காலஞ்சென்ற கணபதிப்பிள்ளை ஆசா ரியாரின் அன்பு மனைவி அன்னப்பிள்ளை 10-09-94 அன்று காலமாகி விட்டார்.

அன்னார் தையல்நாயகி, இரத்தினகோபால் (திரு கோணமலை), குணபாலசிங்கம், காலஞ்சென்ற அன்னம்மா, நாகம்மா, பாக்கியம் (ஆசிரியை பொன் பரமானந்தா வித்தியாசாலை, குரும்பசிட்டி), இலங்கை நாயகி (நெசவு மேற்பார்வையாளர், புடவைக் கைத் தொழில் பகுதி பிரதேச செயலகம் - நல்லூர்), செல்லம்மா (மலேசியா) ஆகியோரின் அன்புத் தாயா ரும் கந்தையா, மகேஸ்வரி, கமலாதேவி, செல்லையா, சிவகுரு, இராசரத்தினம், கனகரத்தினம் ஆகியோரின் அன்பு மாமியும் ஆவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் இன்று (11-09-94) ஞாயிற்றுக்கிழமை நண்பகல் 12-00 மணியளவில் திருநெல்வேலி கிழக்கிலுள்ள இவரது இல்லத்தில் நடை பெற்று பூதவுடல் தகனத்திற்காக இந்து மயானத் திற்கு எடுத்துச் செல்லப்படும். இத்தகவலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
அ. செல்லையா
(மருமகன்)

அரசடி லேன்,
திருநெல்வேலி கிழக்கு.
(32829)

---

### சின்னத்தம்பி காசிப்பிள்ளை

சின்னத்தம்பி காசிப்பிள்ளை இயற்கை எய்திவிட் டார். இவர் காலம் சென்ற நாகம்மாவின் அன்புக்கண வரும்; செந்திவேல் (பொதுவுடைமைவாதி - (பத்திரி கையாளர் - எழுத்தாளர்), செங்கமலதேவி (ஆனைக் கோட்டை), கதிர்காமு (பிரான்ஸ் . லீலாவதி, பர மேஸ்வரி (சுதுமலை), ஆகியோரின் அன்புத் தந்தை யாரும்; செல்வராணி, திருநாவுக்கரசு (கொழும்பு) ஈஸ்வரி (பிரான்ஸ்), சிவபாலன் (டோகா), ஆகியோரின் அன்பு மாமனாரும்; நந்தமோகன், செல்வமெளரி, மணிவதாஸ், கமல தனி, கலைரஞ்சனி (பிரான்ஸ்) கமலநந்தினி, நடேஸ்வரன், மகேஸ்வரன், கமலேஸ் வரன், கலைச்செல்வி, தமிழ்மாலினி (பிரான்ஸ்) சர்மிளா (பிரான்ஸ்), கார்த்திபன் (பிரான்ஸ்) ஜீவானந்தம், ஜீவகன் ஆகியோரின் அன்புப் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (11.9.94) ஞாயிற்றுக்கிழமை பகல் 12 மணிக்கு அவரது இல்லத் தில் நடைபெற்று பூதவுடல் புத்தூர் மேற்கு சிந்தசிட்டி மயானத்தில் தகனம் செய்யப்படும். இவ்வறிவித்தலை உறவினர்கள், தோழர்கள், நண்பர்கள் ஏற்றுக்கொள் ளவும்.

தகவல்:
சி. கா. செந்திவேல்
(மகன்)

'தாயகம்'
பருத்தித்துறை வீதி,
சிறுப்பிட்டி வடக்கு,
நீர்வேலி
(32819)

---

### சிற்பக்கலைஞர் கலாகேசரி ஆறுமுகம் தம்பித்துரை

பிரபல சிற்பக் கலைஞரும், ஓய்வுபெற்ற சித்திர வித்தியாதிபதியுமாகிய கலாகேசரி ஆறுமுகம் தம்பித் துரை ஆச்சாரியார் அவர்கள் 09-09-1994 வெள்ளிக் கிழமை அன்று இந்தியாவில் காலமானார்.

அன்னார் யாழ் திருநெல்வேலி காலஞ்சென்ற பிரபல சிற்பாசாரியார் க. ஆறுமுகம் - காலஞ்சென்ற பொன்னம்மா தம்பதிகளின் சிரேஷ்ட புதல்வனும், காலஞ்சென்ற தவமணிதேவியின் அன்புக் கணவரும், Dr. கலைவாணியின் (பேராதனை பல்கலைக்கழகம்) அன்புத் தகப்பனாரும், திருமதி வைரமுத்து நாகரத்தி னம், ஸ்தபதி ஜீவரட்ணம் (ஆச்சாரியார்), கந்தசாமி, இராசதுரை (பிரான்ஸ் , துரைராசா, மகாலிங்கம் (ஜேர்மனி), சிவலிங்கம் ஆகியோரின் அன்புச் சகோத ரனும், த. வைரமுத்து ,தவமணி, சிந்தாமணி, ராஜேஸ்வரி [பிரான்ஸ்], காலஞ்சென்ற சாரதா ராஜேஸ்வரி (ஜேர்மனி), காலஞ்சென்ற செல்வராணி, தர்மமணி ஆகியோரின் அன்பு மைத்துனரும், இரத்தின குமார் (லண்டன்), புனிதவதி [லண்டன்] கௌசல்யா (லண்டன்) ஆகியோரின் அன்பு மாமனாரும், ஜெயப் பிரகாஸ், ஜெயவாணி, ஜெயதீஸ், கோகிலவாணி, றமேஸ், சதீஸ், ரதீஸ், திலீஷ், ராஜேந்திரகுமார், சுரேஸ்குமார், ராதிகா, ராதா, விஜிதா, ரதீபன், சஜிதா, சசிகாந்தன், சசிகுமார், சசிகலா, சிவசங்கர், சிவரஞ்சனி, சிவராஜ், சிவப்பிரபா ஆகியோரின் அன்புப் பெரியப்பாவும் ஆவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் இந்தியாவில் நடை பெற்றன. இத்தகவலை உற்றார், உறவினர், நண்பர் கள் ஏற்றுக்கொள்ளவும். திருநெல்வேலியில் துக்கம் அனுஷ்டிக்கப்படும்.

தகவல்:
ஸ்தபதி ஆறுமுகம்
ஜீவரட்ணம் ஆச்சாரியார்

ஆறுமுகம் சிற்பாலயம்,
திருநெல்வேலி.
(32831)

---

ஓம்

# திருமண அழைப்பு

அன்புடையீர்!

நிகழும் மங்களகரமான பவ வருஷம் ஆவணி மாதம் 30 ஆம் திகதி (15 - 09 - 1994) வியாழக்கிழமை பகல் 9 01 மணி தொடக்கம் 10 - 10 வரையுமுள்ள

★ துலா லக்கின சுபமுகூர்த்த வேளையில் ★

| | |
|---|---|
| எமது ஏகபுதல்வன் திருநிறைசெல்வன் ஞானரூபன் (B Com) (பாபு) உரிமையாளர், அஜந்தாஸ் ரெக்ஸ்ரைல்ஸ், யாழ் அவர்களுக்கு | எமது புத்திரி திருநிறைசெல்வி மாலினி அவர்களுக்கும் |

நல்லூர் சட்டநாதர் வீதியில் அமைந்துள்ள இளங்கலைஞர் மன்றக் கலாமண்ட பத்தில் திருமணவைபவம் நடத்தப் பெரியோர்கள் நிச்சயித்து இருப்பதால் தாங்கள், தங்கள் சுற்றம் சூழ வருகை தந்து மண மக்களை ஆசீர்வதித்து சிறப்பிக்குமாறு அன்புடன்

★ அழைக்கின்றோம் ★

இங்ஙனம் தங்கள் நல்வரவை நாடும்;

திரு. திருமதி சு. சிவஞானம்,
"சண்முக செல்வம்",
நல்லூர் வடக்கு,
நல்லூர்.

திரு. திருமதி மா. பொன்னுத்துரை
Dr. திரு திருமதி பொ. பரஞ்சோதி,
60, அம்மன் வீதி,
கந்தர்மடம்,
யாழ்ப்பாணம்.

(இரு வீட்டார் அழைப்பு)
[32814]

---

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்டெட்டினால் யாழ்ப்பாணம், நாவலர் வீதி, 893/2 இலக் கத்திலுள்ள அச்சகத்தில் 11 - 09 - 1994 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org